



பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5: பிரமோதூத ஞு சித்திரை மீ 6 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 22 (19-04-1990 UTHAYAN LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் : 64






# புதிய சவால் எதையும் நாம் சந்திக்கத் தயார்!

## எழுச்சி நாளை ஒட்டி பிரபா விடுத்த அறிக்கை



யாழ்ப்பாணம், ஏப் 19

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றிகொண்டு, இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது. மலை போல மக்கள்சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்க தயார்!

இன்றைய எழுச்சி நாளை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

உண்ணா நோன்பிருந்த அன்னை பூபதி தமது இன்னுயிரை இம் மண்ணின் மக்களுக்காகத் தியாகம் செய்த இரண்டாவது நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டியே இன்று எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

திரு. பிரபாகரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை, அந்தத் தியாகியின் அற்புதமான அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து எமது இதய அஞ்சலியை

( 4ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்திலும் நகை மீளளிப்பு

மாங்குளம், ஏப். 19

மாங்குளம் மக்கள் வங்கிக் கிளையில் இன்று முதல் அடகு நகைகள் மீளளிக்கப்படவுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



வரலாறு படைச்ச அன்னைக்கு இன்டைக்கு எல்லோரும் அஞ்சலி செய்து எழுச்சி அடைய வேணும்!

## இடைக்கால நிர்வாகத்தை புலிகள் ஏற்க மாட்டார்கள்

### ஆலோசகர் பாலசிங்கம் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் எதனையும் எந்தக் காரணம் கொண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கமாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு,கிழக்கு சமாதானக் குழுத் தலைவரும், அமைச்சருமான ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத்தை அண்மையில் சந்தித்த ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) தலைவர்கள்—

''வட - கிழக்கு மாகாண சபை நிர்வாகம் செயற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவது சாத்தியம் இல்லை எனின், எல்லா தமிழ் அமைப்புக்களும் பங்கு கொள்ளும் 'இடைக்கால நிர்வாகம்' அமைக்க வேண்டும்'' எனக் கேட்டிருந்தனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே டாக்டர் பாலசிங்கம் மேற்கண்ட தகவலை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் கூறியதா

(5ஆம் பக்கம் பார்க்க)

## அடகு நகைகள் நாளை யாழ். நகரில் மீளளிப்பு

மக்கள் வங்கியில் அடகு வைத்து மீளப்பெற பணம் செலுத்தியோரின் இரண்டாம் கட்ட நகைகள் நாளை வெள்ளிக்கிழமை மீளளிக்கப் பட இருக்கின்றன.

யாழ்-பொலீஸ் நிலையத்தில் வைத்து இந்த நகைகள் மீளளிக்கப்படும் என்று வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். பிரதான வீதி, புங்குடுதீவுக்கிளைகளில் 12-10-89 வரையும்—

யாழ்-நவீனசந்தைக் கிளையில் 10-10-89 வரையும்—

சாவகச்சேரி. பளை ஸ்ரா

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## றிசேர்வ் பொலீஸ் பதவி: நாளை நேர்முகப் பரீட்சை

### கொழும்பிலிருந்து வரும் குழு நடத்தும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை றிசேர்வ் பொலீஸ் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ் - பொலீஸ் நிலையத்தில் நடைபெற இருக்கின்றன.

கொழும்பில் இருந்து வரும் எட்டுப்பேர்கள் அடங்கிய குழுவினரே யாழ்ப்பணத்தில் நேர்முகப் பரீட்சைகளை நடத்துவர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களில் இருந்தும் பத்தாயிரம் றிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை இன்று மட்டக்களப்பில் தொடங்குகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

பயிற்சி கலாசாலை நேர்முக பரீட்சை:

## பத்தரமுல்லைக்கு நேற்று தமிழ் ஆசிரியர் படையெடுப்பு

கொழும்பு, ஏப். 19

மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, அளுத்கம, கோப்பாய், தலாவாக்கொல்லை ஆகிய இடங்களில் உள்ள ஆசிரிய பயிற்சி கலாசாலையில் நடப்பு கல்வியாண்டில் பயிற்சி பெறவிருக்கும் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகக் கிளையில் ஆரம்பமானது.

இது பற்றிய தகவல் வெளியானதை அடுத்து பெரும் எண்ணிக்கையான தமிழ் ஆசிரியர்கள் பத்தரமுல்லை அலுவலகத்துக்கு நேற்று படையெடுத்தனர்.

பெட்டி, படுக்கைகளுடன் பத்தரமுல்லையில் வந்திறங்கிய ஆசிரியர் கூட்டத்தினால் அங்கு வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டதாக அங்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

### நோன்பு திறக்கும் நேரம்

19-04-1990
ஸஹர் முடிவு 4-26
நோன்பு திறக்கும் நேரம் 6-19

### சுப நேரம்

வியாழக்கிழமை சித்திரை 6
19-04-1990
சுபநேரம்:
07-32 முதல் 09-02 வரை
இராகுகாலம்
01-32 முதல் 03-02 வரை

## நளின் இன்று வடக்கே!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனிவிரத்ன இன்று பலாலி வருகிறார்.

வடக்கில் அவரது வருகை தொடர்பான மேலதிக ஏற்பாடுகள் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை,

இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான டாக்டர் அன்ரன் பாலசிங்கம் உட்பட சில உயர்மட்ட பிரதிநிதிகளை அவர் சந்திக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் அதனை ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை.

இதேவேளை —

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சர் திரு. ஏ. எம். எஸ். அதிகாரி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பலாலி வருவார் என்றும்–

அவரது வருகை பற்றிய விவரங்களை ஆளுநர் நளின் செனிவிரத்ன அன்று பலாலி

[4 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் உண்ணா நோன்பிருந்த அன்னை பூபதி தம்முயிரை தமிழுக்காக உயிர்த்தியாகம் செய்த பின்னர் மீளாத்துயில் கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். (உ)

## நல்லூரில் இன்று பொதுக்கூட்டம்! நண்பகலுடன் கடைகள் மூடப்படும்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 19

இன்று அன்னை பூபதியின் எழுச்சி தினத்தை முன்னிட்டு குடாநாட்டின் சகல பகுதிகளிலும் கடைகள் யாவும் நண்பகலுடன் மூடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மினிபஸ்களும் தமது சேவைகளை நண்பகலுடன் நிறுத்திக் கொள்ள உள்ளன.

ஆயினும் நல்லூரில் நடைபெற உள்ள அஞ்சலி கூட்டத்திற்கு பொதுமக்களை ஏற்றி இறக்கும் பணியில் இவை ஈடுபடும்.

படமாளிகைகளும் தமது இன்றைய திரை[illegible] காட்சிகளை நிறுத்தியுள்ளன.

இது தொடர்பான அறிவிப்புகளை வர்த்தகர் சங்கங்கள், மினிபஸ்சேவை சங்கங்கள், திரைப்படம் திரையிடுவோர் சங்கம் என்பன விடுத்துள்ளன

இதேவேளை இன்று பிற்பகல் 4 மணியளவில் நல்லூரில் நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு கலந்துகொள்ள விரும்பும் பொதுமக்களை ஏற்றிவர குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் மினிபஸ், மற்

( 5ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் எழுச்சி!

மட்டக்களப்பு, ஏப். 19

அன்னை பூபதி உண்ணா நோன்பிருந்த மட்டக்களப்பு நகரம் அன்னையின் நினைவாக எழுச்சிக் கோலம் பூண்டிருக்கிறது.

மக்களின் எழுச்சியை நினைவுபடுத்தும் வகையில் நகர் எங்கும், எந்த இடமும் தவற விடாமல் ஒரே சோடனை மயமாகக் காட்சியளிக்கிறது.

அன்னையின் நினைவாகவும் ஈழமண்ணில் இருந்து இந்தியப்படை வெளியேற்றப் பட்டதை கொண்டாடும் முகமாகவும் இன்று மாலை நான்கு மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

மக்களின் பேரணியைத் தொடர்ந்து மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் பேரணி!

திருகோணமலை, ஏப்ரல் 19

திருகோணமலையில் அன்னை பூபதி நினைவாகவும் எழுச்சி தினத்தை ஒட்டியும் இன்று பேரணி ஒன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது

நிலாவெளி, 3 ஆம் கட்டை, அன்புவழிபுரம் ஆகிய பகுதிகள் ஊடாக வரும் பல்வேறு பேரணிகள் திருகோணமலை ரயில் நிலையப்பகுதியில் ஒன்று கூடி நகருக்குள் பிரவேசிக்கும்.

இன்றும் அன்னை நினைவாக பொதுக்கூட்டம் ஒன்று திருகோணமலை நகரில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## இன்று வவுனியாவில்!

வவுனியா, ஏப் 19

அன்னை பூபதியின் நினைவாக வவுனியாவிலும் இன்று பெரும் எழுச்சி விழா நடைபெறவிருக்கிறது.

திருமதி சீதாதேவி பொன்னையா தலைமையில் இந்த விழா வவுனியா நகரசபை மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இம்மாவட்டத்தில் உயிரிழந்த வீரவேங்கைகளின் அன்னையர் விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி. ரதி, வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு.சந்திரன், வவுனியா அரசியல் பொறுப்பாளர் திரு. தினேஷ் ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் இந்த விழாவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் விழா!

அம்பாறை, ஏப் 19

அன்னை பூபதியின் நினைவாக அம்பாறையிலும் எழுச்சி விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவை காரைதீவு விபுலானந்த மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று சிறப்பாக நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செய்துள்ளது

அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களில் இருந்தும் எழுச்சி ஊர்வலங்கள் ஆரம்பமாகும் என்றும்- இந்த ஊர்வலங்கள் அனைத்தும் காரைதீவு விபுலானந்த வித்தியாலய மைதானத்தில் ஒன்று கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு மாபெரும் எழுச்சிக் கூட்டம் ஒன்று நடைபெறும்.

விழாவுக்கு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் தலைமை வகிப்பார்.

இந்த எழுச்சி விழாவை ஒட்டி அம்பாறை மாவட்டத்தில் வீதிகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன (ஒ)

## திருமலையில் மாத்தயா; கூட்டத்தில் மக்கள் திரள்!

திருகோணமலை, ஏப்ரல் 19

திருகோணமலை முற்றவெளி அரங்கில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி நேற்று மாலை நடத்திய மாபெரும் பொதுகூட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

இந்தக் கூட்டத்தில் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) கவிஞர் காசி ஆனந்தன் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ரூபன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்

முன்னதாக நகருக்கு வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களை நகரவீதிகளில் மக்கள் பூரண கும்பம் வைத்து வரவேற்று ஊர்வலமாக திருமலை முற்றவெளிவரை அழைத்துச் சென்றனர். (உ)

## அவசரகால விதிகள் தளர்வு

கொழும்பு, ஏப்ரல் 19

அவசரகால சட்ட விதிகள் நேற்று மேலும் தளர்த்தப்பட்டன

பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உட்பட பல விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. [உ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சவூதியிலிருந்து கொண்டு வரப்பட்ட ஜெனரேட்டர்கள் டீசல் என்ஜின்கள் வேறு பல பொருட்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு யூனிவேர்சல் சேவிஸர், 15, ஆடியபாத வீதி, கல்வியங்காடு. (சந்தியில் இருந்து 100 யார் தூரம்) (3307)

Honda மோட்டார் சைக்கிள் CD 90 Benly விற்பனைக்குண்டு. தொடர்பு: K. K. சர்மா, நளினி இறைன்டிங் மில், 484 வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (12339)

ஓரளவு நிலையில் உள்ள C. L.A.- 40 கார் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு, சி. நாதன் No.16/3 விதானையார்வீதி, ஈச்சமோட்டை யாழ்ப்பாணம். (12333)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 2 பரப்புக் காணி நல்ல சுற்றாடலில் தனிக்கிணறு மின்சார வசதியுடன் யாழ். பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் உடன் விற்பனைக்குண்டு. இல. 38, திருநெல்வேலி வீதி, திருநெல்வேலி-தெற்கு (சிவன் கோவிலடி) யாழ்ப்பாணம். (3271)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன் செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### Saai Raam

பாவித்த T.V., மணிக்கூடு, கட்டில், மேசை, மற்றும் பல சரக்கு கடைச் சாமான்கள் விறாக்கி, பெட்டகம் உடன் விற்பனைக்கு உண்டு. Saai Raam, 3 ஆம் கட்டை, பருத்தித்துறைவீதி. கல்வியன்காடு. (12331)

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும் விற்கப்படும். Senathirajah, Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட், (முரசொலி இலங்கை வங்கிக்கு முன் பட்டப் படிப்புக் கல்லூரி லேன்) யாழ்ப்பாணம். (3274)

### WANTED PHARMACIST

Wanted a well experienced PHARMACIST for a leading Medical Stores in Jaffna Town. Apply with Particulars. No: 677, C/o Uthayan. (3280)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline வெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் கறுப்பு [பிலிமத்] சேவற் குஞ்சுகள், Golden Comet, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் முறையே ஒவ்வொரு செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3202)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Lohmann) பிறவுண் சேவல் தனிக் கறுப்பு, சிகப்பு நிற சேவல், (பிலிமத்) கறுப்பு வரி சேவல், புறோயிலர் வான் கோழிக் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் (25-4-1990) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (3279)

### தேவை

ரூறிஸ்ட் ஹோட்டலுக்கு பார் கீப்பர், சமையல் ஆள், உதவியாளர், வெயிற்றர் உடன் தேவை. சவோய் ரூறிஸ்ட் ஹோட்டல், கீரிமலை றோட், (K.K.S சந்தியிலிருந்து 400 மீற்றர் தூரத்தில்) (3269)

### உடன் தேவை

அச்சுக் கோர்ப்பாளர்கள் (கொம்பஸிட்டர்கள்), புத்தகம் கட்டுபவர்கள் (பைண்டர்கள்), இயந்திர இயக்குநர்கள் (பிளேட்டின் - சிலிண்டர் மெஷின் மைன்டர்கள்) உடன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப அதியுயர் வேதனம் வழங்கப்படும் பயிற்சிபெறஇருபாலார்களும். விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்தில் பயிலுனர் படி உண்டு. செட்டியார் அச்சகம், 430, சாங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/4285)

### விபரம் தேவை

C. 90, 87 Sri 3580 இலக்க மோட்டார் சைக்கிளின் தற்போதைய உரிமையாளர் குட்டி இராமதாஸ் அல்லது இராமச்சந்திரன் என்பவருடைய விபரங்கள் தேவைப்படுவதால் தயவு செய்து தொடர்புகொள்ளவும். முகாமையாளர் K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு. [12926]

### தவறிவிட்டன

செம்பியன் பற்று மினிபஸ்ஸில் 17-4-1990 செவ்வாய்க்கிழமை செபமாலை ஜெயராணி என்பவரது கறுத்த கைப்பையுடன் அடையாள அட்டையும் வங்கிப் புத்தகமும் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள், செ. ஜெயராணி, செம்பியன் பற்று வடக்கு, செம்பியன் பற்று எனும் முகவரியில் அல்லது உதயன் காரியாலயத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும் (3278)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/4209)

# அலுவலகம் வரும் பொதுமக்கள் அன்பாக நடத்தப்பட வேண்டும்

## பணிமனை திறப்பு விழாவில் அரச அதிபர்

பண்டத்தரிப்பு, ஏப் 19

அரசாங்க அலுவலகங்களுக்கு வரும் பொது மக்களை, அன்பாகவும், பண்பாகவும் உபசரித்து அவர்கள் வந்த கருமத்தை நிறைவேற்றி அனுப்ப வேண்டிய, கடமையுடையவர் அரசாங்க உத்தியோகத்தர்.

8 லட்சம் ரூபாவில் புனரமைக்கப்பட்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரெட் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சிவசம்பு தலைமையில் இந்த திறப்பு விழா நடந்தது.

யாழ்ப்பாணம் கச்சேரி மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் உரையாற்றுகையில், இன்று மக்களது படலைகளுக்குச் சென்று அரசாங்கம் உதவ வேண்டும் என்பது தான் அரசின் கோட்பாடு. நடமாடும் அலுவலகங்கள் இதற்காகத் தான் ஏற்படுத்தப்பட்டன என்றார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், சண்டிலிப்பாயில் முன்னாள் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சபாபதிப்பிள்ளை, சபாநாராயணன் உட்பட பலர் உரையாற்றினார்.

கிராம சேவையாளர் திரு. க. கந்தசாமி நன்றி நவின்றார். (இ-120)

## பாஸ்போர்ட் மோசடி; மூவர் கைது!

பாஸ்போர்ட் மோசடியில் ஈடுபட்டிருந்த கோஷ்டி ஒன்றை பேலியகொட பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

வத்தளை, தெலங்காப்பத்த என்னுமிடத்தில் வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலீஸார் அங்கு இருந்து மோசடி செய்யப்பட்ட பாஸ்போர்ட்கள், அதற்கு பாவிக்கப்படும் ரப்பர் முத்திரைகள் மற்றும் உபகரணங்களையும் கைப்பற்றினர். மூன்று சந்தேக நபர்களும் அப்போது கைது செய்யப்பட்டனர் (உ-எ)

## நலன்புரிச் சங்கத்துக்கு உதவி தொடர வேண்டும்

### கட்டடத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஏப்ரல் 19

''நோயாளர் நலன்புரிச் சங்கம் மிகவும் நெருக்கடியான காலத்திலும் நோயாளருக்குப் பணிபுரிந்து வந்துள்ளது. கடந்தகாலத்தில் எமது சங்கத்திற்கு பொதுஸ்தாபனங்களிடமிருந்தும் வர்த்தகர்கள், பொதுமக்களிடமிருந்தும் உதவிகள் கிடைத்து வந்துள்ளன. இந்த உதவிகள் தொடர வேண்டும்.

தற்போது அமைதியான சூழ்நிலை தோன்றிவிட்டதால் நோயளர்கள் தொகை குறைந்து விட்டதாக யாரும் எண்ணிவிடக் கூடாது''

யாழ் போதனா வைத்திய சாலையில் நோயாளர் நலன்புரிச்சங்க கட்டடத் திறப்பு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய மேற்படி சங்க உபதலைவர் அருட் திரு பிரான்சிஸ் டானியல் இவ்வாறு தெரிவித்தார்.

நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் கட்டடத்தை வைத்தியப்பணிப்பாளர் செல்வி புஷ்பா சண்முகம் திறந்து வைத்தார்.

வைத்திய கலாநிதி திருமதி இ. கண்ணுத்துரை போதனா வைத்தியசாலை கணக்காளர் திரு. சிவலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

சங்கத்தின் செயலாளர் ஜனாப், ஏ. ஏச் ஜ லாபீர் தனது நன்றியுரை வழங்கினார். [க-5]

## ஜுபிடர் கழகம் சாம்பியன்

யாழ்ப்பாணம் ஏப், 19

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் சித்திரைப் புத்தாண்டுத் தினத்தை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்ட இப் பிரிவுக்கு உட்பட்ட 19 கழகங்களுக்கு இடையிலான 5 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சங்கானை கிழக்கு ஜுபிடர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அராலி கலை வாணி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 12 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியிலும் இரண்டாம் இடத்தை இக்கழகம் பெற்றுள்ளது. (க)

## அனிதா போட்டோ

பருத்தித்துறை வீதி, — வல்வெட்டித்துறை.

கண்ணைக் கவரும் வண்ணக் கலரில் படம் பிடிக்கும் ஸ்தாபனம்

★ கறுப்பு, வெள்ளைப் படங்கள் செய்து கொடுக்கப்படும்

★ மலிவு விலைகளில் சகல பிலிம் வகைகளும் அல்பங்களும் கிடைக்கும்.

தரமான படங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

அனிதா போட்டோ

வல்வெட்டித்துறை. (3318)

## நன்றி கூறுதல்

விசுவாசத்தைப் பரப்பும் கடமையாக எனது பிள்ளைகளுக்கு வழங்கிய நன்மைகளுக்காக யேசுவுக்கும், மரியன்னைக்கும், புனிதர்கள் அந்தோனியார், யூதாவுக்கும், நன்றியைத்தெரிவிக்கிறேன்.

(12336) -பக்தர்

## பிறந்த நாள் வாழ்த்து



### ★ செல்வன் அரவிந் ★

மேற்கு ஜேர்மன் நகரில் வாழும் சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட விக்னராஜசர்மா- கோமதி தம்பதிகளின் செல்வக் குமரன் அரவிந் தனது முதலாவது பிறந்தநாளை 17-04-1990 இல் மேற்கு ஜேர்மனியில் கொண்டாடினார்.

அவரை கோண்டாவிலில் வாழும் அவரது தாத்தா, பாட்டி, மாமன்மார், மற்றும் உறவினர்கள், அனைவரும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் எய்தி வாழ்க என வாழ்த்துகின்றனர் ((12343)

## FOR SALE

Belling Compact Auto Deluxe Electric Cooker Coffee Maker, Coffee Percolator, Conning Ware, Pyrex, Necchi 554, Etc. Immaculate Condition.

**First Reasonable Offer.**

Contact:- MATHER,
Lawton Road, Manipay.
(Near Hindu College)
(3309)

## 3ஆவது மாத நினைவஞ்சலி



திருமதி
### வேலுப்பிள்ளை புவனேஸ்வரி

தாயின் மடியில்: 11 - 05 - 1931
மண்ணின் மடியில்: 19 - 01 - 1990

கொலை வாளினை எடடா
மிகக் கொடியோர் செயல் அறவே''
பாவேந்தர் பாரதிதாசன்.

ஐம்பத்தெட்டாண்டுகளாய் எரிகின்ற குலவிளக்காயிருந்தாய். அவ்விளக்கில் வஞ்சகர் செயலால் சிந்திய இரத்தத்தை எண்ணெய் எனப் பொழிந்து ஏற்றி வைத்துவிட்டு ஏகி விட்டாயே என் உயிரே.

சிங்கமறவர், வீரமங்கையர் பொங்கு தமிழை காப்பர்- எட்டப்பர் கூட்டத்தை குழிதோண்டிப்புதைப்பர்- என்று எண்ணி ஏகி விட்டாயே என் ஏந்திழையே

உன்பிரிவால், கரைசேர முடியா துயரக்கடலில் மூழ்கி நிற்கும்
உன் இனியவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''GOLDEN FISH''
71, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (12337)

## ஒல்லாந்து (Holland) நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு விமானம் மூலம் தரிவிக்கப்படும்

# ரெட் கிரியோல்
## [RED CREOLE]
# பெரிய வெங்காய விதை

(ஆகக் குறைந்தளவு 85% விளை சக்தியுடையது)

25 கிலோ பொதிகளில்
ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி முதல்
விற்பனைக்கு கிடைக்கும்

வியாபாரிகளே உங்கள் தேவைகளுக்கு முன் பதிவு செய்துகொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

**ஈஸ்வரன் பிரதர்ஸ்,**
267, செட்டியார் தெரு,
கொழும்பு - 13.
தொலைபேசி: 423864, 432599, 422741, 431741

## DAY CLASS

மாதம் ஒன்றுக்கு
60 மணித்தியாலம்
பொருளியல் திரு. உதயன்
ஆரம்பம்: 20 - 04 - 1990

தினமும்
11 - 12 வினாவிடை வகுப்பு (14 வருட வினா - விடை)
12 - 1 கேள்விக் கோட்பாடு
1 - 2 சென்மதி நிலுவை

மாணவரின் தெரிவுக் கேற்ப வகுப்பில் இருக்கலாம்.

★ ECALOM ★
(மனோகரா சந்தி)
(சி/4295)

## பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கான இல்லம்

### பெண் மேற்பார்வையாளர் தேவை (MATRON)

வயது 34-40 க்கும் இடையில், விதவையாகவும், முழுநேரப் பொறுப்பு வகிக்கக்கூடியவராகவும், இந்து சமயத்தைச் சேர்ந்தவராகவும், சான்றிதழ், அனுபவம், கல்வித் தகைமை இவைகளுடன் 01 - 05 - 1990 க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

பொறுப்புக்கள் இல்லாதவருக்கு வாய்ப்புண்டு. சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

செயலாளர்,
ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
[12344]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

**பொருள்:**

ஊடுதல் ஊடலை உணர்ந்து விடுதல், அதன்பின் கூடுதல் ஆகிய இவை காதல் வாழ்வு நிறைவேறப் பெற்றவர் பெற்ற பயன்களாகும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
19 - 04 - 1990 த. பெ இலக்கம் 25

## சில்லறைத் திருத்தம் வேண்டாம்

மாகாண சபைகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இருசாராருக்கும் இடையில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்த்து, உறவை வளர்ப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவை இன்னும் ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும் என்று மாகாண சபைகளுக்குப் பொறுப்பான புதிய அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

மாகாணசபை ஒரு புதிய அமைப்பு. வேண்டுமானால் உள்ளூராட்சிக் கட்டமைப்பில் சற்று உயரமானது என்று சொல்லலாம். ஆனால் ஆட்சி அதிகாரத்தைப் பரவலாக்குவதன் ஆரம்பப் புள்ளி. அதன் அமைப்பிலும், கட்டுக்கோப்பிலும் எத்தனையோ கூட்டல்கள், பெருக்கல்கள், மாற்றங்கள் செய்யப்பட வேண்டி உள்ளன.

மக்கள் தங்களைத் தாமே ஆள்வது தான் சனநாயகம். அதாவது ஆட்சிக்கு நாயகர்கள் ஆக வேண்டியவர்கள் பொது சனங்கள். ஆட்சி நிர்வாகத்தில் மக்களின் பங்களிப்பு நூறு சதவீதம் சேர்ந்தால்தான் சனங்கள் உண்மையான நாயகர்கள் ஆகலாம்.

மக்கள் தம்மைத் தாமே ஆள்வதற்கு, தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிப்பதற்கு உரிமை உடையவர்கள். அதாவது சுயநிர்ணய உரிமை அவர்களின் மறுக்க முடியாத பிறப்புரிமை. தங்கள் பிரதேசத்தை தாமே வளம்படுத்தவும், அந்த வளத்தைத் தங்கள் வாழ்க்கை உயர்ச்சிக்குப் பயன்படுத்தவும், தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கும் உரிமைகளை நல்குவதே சுயநிர்ணய உரிமை.

சுயநிர்ணய உரிமைக்கும், அதிகாரப் பரவலுக்கும் அரசியல் கட்டமைப்பில் பெரிய தொடர்பும், நெருக்கமும் இறுக்கமும் உண்டு.

ஆனால் சுயநிர்ணய உரிமை கேட்டுப் போராடும் ஈழத் தமிழர்களுக்கு ராஜீவும் - ஜே. ஆரும் சேர்ந்து கிள்ளிப்போட்ட பிச்சைதான் மாகாணசபை. மாகாண சபையை, இந்தியாவில் உள்ள மாநில சபையின் தரத்துக்கு உயர்த்த நிச்சயம் வழி செய்யப்படும் என்று தேனொழுகப் பேசிய ராஜீவ் இப்போது பெட்டிப் பாம்பாக முடங்கி விட்டார் என்பது வரலாற்று உண்மை.

தமிழ் மக்களின் உரிமைகளை மனதில் வைத்து உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் சம்பந்தமாக எதனைச் செய்தாலும், தமிழர் அரசியல் நிலையை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டே செயற்பட வேண்டும். சிங்களப் பிரதேச மாகாண சபைகள், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணச் சென்ற வழியில் உதித்தவையே. ஆகையால் மாகாண சபைக்கு வலுக்கொடுப்பதாயினும் சரி, புதிய வடிவமைப்பதாயினும் சரி தமிழர் உரிமைகள் என்ற பின்னணி ஊடகத்தை (Perspective) கருத்தில் வைத்துக் கொள்வது மிகப் பிரதானம்.

உண்மையைச் சொல்வதானால், ஆகக் குறைந்தது சுயநிர்ணய உரிமை என்ற உச்சக்கோட்டை நெருங்கும் விதத்திலாவது, மாகாண சபையின் கட்டமைப்புத் திருத்தி, புதுக்கி அமைக்கப்பட வேண்டும். அதுவே உடனடித் தேவை. அதனை விடுத்து, மாகாண சபைக்கும் மத்திய அரசுக்கும் இடையில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதோ, அவற்றுக்கிடையே உறவை வளர்ப்பதோ பெரிய காரியமாகி விடாது. அதாவது அதிகாரப் பரவலின் ஆரம்பகட்ட நடைமுறைச் சிக்கல்களைக் களைவதை, பூதக் கண்ணாடி போட்டுப் பெரிதாக்கிக் காட்டுவதால் நிதர்சனமாக எதுவும் நடக்கப் போவதில்லை. இது வெறும் சில்லறைத் திருத்தமே!

மாகாண சபைகளின் அதிகார வரம்புகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். அவை சுயநிர்ணய உரிமையின் உச்சக்கோட்டை எட்டிப் பிடிக்க ஏற்பாடாக வேண்டும். பிரதேச மக்கள் தமது மண்ணின் ஆட்சி நிர்வாகத்தில் பூரண பங்கு கொள்ளும் மைந்தர்களாக வேண்டும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளுக்கு உத்தரவாதமும், உறுதிப்பாடும் தரவல்ல, நிறைந்த—பூரணமான—அதிகார வலு கொண்ட ஒரு புதிய கட்டமைப்புக்கு மாகாணசபை உயர்த்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாசா தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் பாடுபடும் வேளையில், மாகாண சபைக்குச் சில்லறைத் திருத்தம் செய்வது குறித்து பிரஸ்தாபிப்பது திருப்திகரமானதல்ல. அதனை அதிகாரம் நிறைந்த அரசமைப்பாக மாற்றுவதில் உடன் கவனம் செலுத்த வேண்டும். அதுவே பொருத்தமானது. நாட்டின் அரசியல் நிலையை முன்னேற்றும்; சீராக்கும்.

## கலைஞர்கள் கௌரவிப்பு

"எமது பாரம்பரிய கலைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். எப்பலனையும் எதிர்பாராமல் கலை வளர்க்கும் நோக்கில் செயற்படும் கலைஞர்களுக்கு இவ்விருது வழங்குவது மிகவும் பொருத்தமானதே"

திருநெல்வேலி இராமகிருஷ்ண மிஷனில் சுவாமி சந்தானந்த விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்ற போது நுண்கலைக் கல்லூரி நிர்வாக இயக்குநர் திரு. இரா. மகேந்திரசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

கலைஞர்களுக்கான சுவாமி சாந்தானந்தா விருது இவ்விழாவில் பிரபல மிருதங்கக் கலைஞர் சங்கீதரத்தினம் திரு. எஸ். மகேந்திரன், வயலின் கலைஞர் சங்கீத வித்துவான் செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜா ஆகியோருக்கு நல்லை ஆதீனம் பரமாசாரிய சுவாமிகளால் வழங்கப்பட்டது.

## தெல்லிப்பளை காசிவிநாயகர் தேர்த்திருவிழா

தெல்லிப்பளை வீணாக்கடவைப்பதி ஸ்ரீ காசிவிநாயகர் கோயில் 18 ஆம் ஆண்டு மகோற்சவத் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்துடன் இது முடிவடையும். (இ-ப)

## மண்டபம்

நெடுந்தீவு, ஏப். 19

நெடுந்தீவில் புதியவெளிச்ச வீடு ஒன்றை அமைக்கவும் துறைமுகத்தில் பிரயாணிகள் இளைப்பாற மண்டபம் ஒன்றைக்கட்டவும் நெடுந்தீவு பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

புனர் நிர்மான அமைச்சு இதற்கான நிதியாக 1 லட்சத்து 70 ஆயிரம் ரூபா வரை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது (ப-111)

## வடக்கு- கிழக்கில் உள்ள 80 ப.நோ.கூ. சங்கங்களை இணைக்க முயற்சி

### கூட்டுறவு ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம் ஏப் 19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 80 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து "நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மேற் கண்ட தகவலை வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதம்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

வடக்கு கிழக்கு மாகாணத்தில் விளையும் நெல் எமக்கு வருடத்துக்கு போதுமானது.

இந்த நெல் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அரிசியாக்கப்பட்டு மீண்டும் இங்கு கொண்டு வரப்பட்டு கூடுதல் விலைக்கு விற்பனையாகிறது.

இந்நிலையை மாற்ற முழு நெல்லையும் இந்த சமாசம் கொள்வனவு செய்து கையிருப்பில் வைத்து அரிசித் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். மீதியான அரிசியை மற்றப் பிரதேசங்களுக்கு அனுப்பலாம்.

உப உணவுப் பொருள்களான வெங்காயம், மிளகாய், உழுந்து போன்றவற்றையும் வாங்கி இருப்பில் வைத்து இந்த சமாசம் விற்பனை செய்யலாம்.

அத்துடன் வெளிநாட்டுப் பொருள்களை கப்பல் மூலம் காங்கேசன்துறை, திருமலை துறைமுகங்களுக்கு கொண்டு வந்து விநியோகம் செய்யலாம்-என்றார். (இ-3)

## வீடியோ திரைப்பட அரங்கு

யாழ்ப்பாணம், ஏப் 19

உள்ளூர் கலாசார நிகழ்ச்சிகளைஊக்குவிக்கும் பொருட்டு வீடியோ திரைப்பட அரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி சேவையாளர் மேற் கொண்டு வருகின்றனர்.

25 அடி நீளமான திரையொன்றை கொண்டதாக இந்த அரங்கு அமையும்.

முழுவதும் உள்ளூர் தயாரிப்பான திரைப்படங்களே இங்கு திரையிடப்படும்.

இதற்கான வீடியோ படஎறி கருவி ( PROJECTOR ) இன்னும் சில வாரங்களில் பெற்றுக்கொள்ளப்படும்எனத் தெரிய வருகிறது. (இ-9)

## இணைப்பு சேவை மூலம் அதிக நன்மைகளைப் பெற முடியும்

### வ. பி. போ. ச. தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் ஏப் 19

"தனியார் பஸ்கள் எம்முடன் ஒத்துழைத்தால் மற்றைய பிரதேசம் போல் இங்கும் இரு சேவைகளும் இணைந்து நேரக் கட்டுப்பாட்டுடன் செயற்படலாம்"

இப்படிக் கூறினார் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தென் இலங்கையில் இ. போ. ச. பஸ்களுக்கும் தனியார் பஸ்களுக்கும் இணைப்பு இருப்பதால் நேரக் கட்டுப்பாட்டுடன் இரு சேவைகளும் நடைபெறுகின்றன.

ஆனால் அந்நிலை இங்கு இல்லை எம்முடன் கூட்டாக அவைகள் இயங்கினால் நேரக் கட்டுப்பாட்டுடன் நல்ல முறையில் சேவையை நடத்த முடியும்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## வீடமைப்பு திட்டங்களை ஆராய யு.எஸ்.எய்ட்ஸ் அதிகாரிகள்

### யாழ்.நகரில் அரச அதிபருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம் ஏப் 19

யாழ் மாவட்டத்தில் மேற் கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்கள் பற்றி ஆராய யு. எஸ். எயிட்ஸ் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இந்த அமைப்பின் அதிகாரிகளான ஜே. டபிள்யூ. பட்லர், எஸ். அபயசேகரா ஆகியோர் செவ்வாய்க்கிழமை அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டை சந்தித்து வீடமைப்பு உதவித் திட்டம்பற்றி ஆராய்ந்தனர்.

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க வழங்கப்படும் உதவித் தொகை இந்த நிறுவனத்தின் உதவியுடனே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஆண்டுவிழா

வட்டுக்கோட்டை சிவன் கோயிலடி கலைவாணி கல்வி நிலையத்தின் 8 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திரு. ச. சின்னப்பு தலைமையில் நடைபெறும்.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும், பட்டப்படிப்புகள் கல்லூரி உதவிப் பதிவாளருமாகிய திரு. வே. சிவயோகலிங்கம் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்கிறார். (ப-161)

## நினைவில் இன்று

19- 04- 1990

● இந்தியாவின் முதலாவது செயற்கைக்கோள் "ஆரியப்பட்டார்" ஏவப்பட்ட தினம். (19- 04- 1975)

## பாதிக்கப்பட்ட சிறுவருக்கு சுகாதார வசதிகள் வழங்க கிராமமட்டத்தில் ஆய்வு

காங்கேசன்துறை, ஏப் 19

கடந்த ஐந்து வருட காலத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களால் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சுகாதார வசதிகள் வழங்க கிராமிய மட்டத்தில் ஆய்வுகள் வலி-வடக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர்களே முக்கியமாக பாதிக்கப்பட்டுள்ளதால் வீமன்காமம் பகுதி பொது சுகாதார மருத்துவமாது திரு. மேரிபுஸ்பம் தலைமையில் பயிலுநர் சுகாதார கிராமிய தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று சிறுவர்களின் சுகாதாரத் தேவைகள் குறித்து ஆய்வு செய்து வருகிறார்கள்.

மயிலிட்டி வடக்கு, வீமன்காமம் பகுதிகளில் தற்சமயம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலசலகூடம் அமைத்தல், போஷாக்கின்மையால் ஏற்படும் நோய்கள், தொற்று நோய்கள், பல் வியாதி போன்ற விடயங்களில் இவர்கள் அக்கறை காட்டி வருகிறார்கள்.

உடனுக்குடன் போஷாக்குணவு, மருந்துகள் ஆகியனவும் வழங்கப்படுகின்றன.

சிறார்களிடையே ஒரு பயநிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவர்கள் போஷாக்கு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி மேரி புஸ்பம் தெரிவித்தார்.

அத்துடன் சிறுவர்களுக்காக விசேஷ கலை நிகழ்ச்சிகளும், விளக்கங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-68)

## தென்மராட்சியில் எழுச்சிப் பேரணி

கொடிகாமம் ஏப் 19

அன்னை பூபதி நினைவாக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, கலைகலாசாரப்பேரவை மாணவர்இயக்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் எழுச்சி ஊர்வலம் புத்தாண்டு தினத்தன்று மாலை மிருசுவில் பன்னிருவர் நினைவுத் தூபியிலிருந்து புறப்பட்டது.

மாலை 3 மணியளவில் ஆரம்பமான ஊர்வலம் இரவு 8 மணியளவில்சாவகச்சேரி நகர மைதானத்தை வந்தடைந்தது. பெரும் எண்ணிக்கையான மாணவர்களும் பொது மக்களும் பங்குகொண்ட இப்பேரணியில் வாகன ஊர்திகளின் பவனியும் இடம் பெற்றது. மிருசுவில் தொடக்கம் சாவகச்சேரிவரைவீதிகள் கண்கவரும் வண்ணம் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன.

இவ் வாகனங்களில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், தியாகி திலீபன், அன்னை பூபதி ஆகியோரின் உருவப்படங்களும், பெரிய அளவிலான புலியின் முகம், புலியின் முழு உருவம் கொண்ட படங்களும் தாங்கிச் செல்லப்பட்டன.

சாவகச்சேரி நகர மைதானத்தில் கலை கலாசார மாணவ இயக்கப் பொறுப்பாளர் என். ரஞ்சன் தலைமையில் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் நடை பெற்றன.

தியாகி குணாளனின் தாயார் திருமதி நாகூர்ச் செல்வன் பரிசில்களை வழங்கினார். யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக், தென்மராட்சிப் பொறுப்பாளர் தினேஷ், அரசியல் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் உரையாற்றினர். (ப-75-31)

### குருநகரில்

குருநகர், ஏப் 19

வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் குருநகர் பகுதிப் போராளிகளின் ஞாபகார்த்தமாக மின்னொளியில் கரப்பந்தாட்ட போட்டிகளை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அன்னை பூபதியின் தியாக மறைவின் 2ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று வியழக்கிழமை போட்டிகள் ஆரம்பமாகின்றன.

குருநகர்சன சமூக நிலையக் கரப்பந்தாட்ட மைதானத்தில் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மின்னொளியில் போட்டிகள் நடைபெறும். (இ-51)

### முல்லைத்தீவில்

ஒட்டுசுட்டான் ஏப் 19

அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கடந்த சித்திரை வருடப்பிறப்பன்று முல்லைத்தீவில் சகல கழகங்களையும் உள்ளடக்கிய பெரும் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

முல்லைத்திவு. புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான்உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பல கழகங்கள் குழுக்களாகச் சேர்ந்து போட்டியில் ஈடுபட்டன.

பங்கு பற்றிய கழகங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. (ப-113)

### முழங்காவிலில்

அன்னை பூபதி நினைவாக இன்று வியாழக்கிழமைமுழங்காவில் மைதானத்தில் உண்ணா நோன்பு நோற்கப் படுகின்றது. அத்துடன் கவி, இசையரங்குகளும் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றன.

பூநகரி பிராந்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் சாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க பூநகரி, மாந்தை ஆகிய இரு உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இந் நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சியில் இன்று வியாழக்கிழமை அன்னை பூபதி நினைவாக பெரிய அளவிலான எழுச்சிப் பேரணி ஒன்று நடைபெறுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் சென்றமாதம் 19 ஆம் திகதி முதல் சுழற்சி முறை உண்ணாநோன்பு தொடர்ந்து நடை பெற்று வருகிறது. (ப-76)

### அச்சுவேலியில்

அன்னைபூபதி கணபதிப்பிள்ளையின நினைவாக அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் - கூட்டுறவு மகளிர் குழுவும் ஏற்பாடு செய்த உண்ணாவிரதம் நேற்று புதன் கிழமை அச்சுவேலியில நடைபெற்றது.

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைமைப் பணிமனை வளவில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (இ-11)

## நாணய மாற்று விகிதம்

17-04-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.39 | 232 35 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002 80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண் | 6508.23 | 6531 30 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2371.51 | 2390.36 |
| 100 | [illegible] | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 24.9288 | 25.1478 |

## வாசகர் திருமுகம்

### டீசல் பிரச்சினை

முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெற்றோலிய கூட்டுத்தாபன முகவராக இருந்தும் பல வருடங்களாக சீராக எரிபொருள் விற்பனை செய்வதில்லை.

இப் பகுதியில் சிறுபோக நெல் சாகுபடி செய்தல், உப-உணவு செய்கை ஆரம்பித்திருக்கும் இவ் வேளையில் விவசாயிகள் உழவு யந்திரங்களுக்கான டீசலை தனியாரிடம் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் த்க்க நடவடிக்கை எடுப்பார்களா?

அ. குமாரசாமி,
ஒட்டுசுட்டான்.

### அட்டனுக்கு பஸ் சேவை

மலையகத்தில் குறிப்பாக அட்டன் - மஸ்கெலியா - பொகவந்தலாவ - நோர்வூட் தலவாக்கொல்லை - அக்கரப் பத்தனை - டயகம போன்ற இடங்களில் கடமையாற்றும் வடமாகாணத் தமிழர்கள் யாழ்ப்பாணம் செல்வதாயின் முதலில் கண்டிக்கோ அல்லது கொழும்பிற்கோ சென்று அங்கிருந்து பஸ் அல்லது புகையிரதம் மூலம் யாழ்ப்பாணம் செல்கிறார்கள். அட்டனில் இருந்து கொழும்பு சென்று யாழ்ப்பாணம் செல்வது நீண்டதூர பிரயாணம் இதனால் அதிக பணச்செலவும் ஏற்படும். ஆகவே அதிகமானோர் கண்டிக்குச் சென்று யாழ்ப்பாணம் செல்கிறார்கள்.

கண்டி மூலம் செல்பவர்கள் முதல் நாள் கண்டிக்குச் சென்று இரவு தெரிந்தவர்களின் வீடுகளிலோ அல்லது செலவு செய்து ஹோட்டல்களிலே தங்கி அதிகாலை பஸ்நிலையம் சென்று இடம் பிடித்து யாழ்ப்பாண பயணத்தை தொடர்கிறார்கள். ஆசனப் பதிவு செய்ய முடியாத நிலை இருப்பதனால் சிறு பிள்ளைகளுடனும் வயது சென்றோர்களுடனும் பிரயாணம் செய்பவர்கள் இடம் பிடிக்க முடியாது பெரும் அவதிப்படுகின்றார்கள்.

இதேபோல் யாழ்ப்பாணத்தில் காலையில் புறப்படும் கண்டி பஸ் கண்டியை வந்து சேர மாலை 4.00 மணிக்கு மேல் ஆகிவிடுகின்றது. கண்டியிலிருந்து நாவலப்பிட்டி - அட்டன் - மஸ்கெலியா - பொகவந்தலாவ - தலவாக்கொல்லை செல்லும் பெருந்தொகையான பிரயாணிகள் கண்டியில் பெருத்த சிரமங்களுக்கு மத்தியில் இரவைக் கழித்து மறுநாள் பஸ்மூலம் குறிப்பிட்ட இடம் வந்து சேர வேண்டி உள்ளது.

தற்போது கண்டிக்கு வரும் இ. போ. ச பஸ் அட்டன் வரை வந்தால் ஏராளமான பிரயாணிகள் பயனடைவார்கள். எனவே, அட்டனிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணம் செல்ல பஸ் வசதி செய்து தரும்படி வடமாகாண இ. போ. ச தலைவரிடம் பிரயாணிகள் சார்பில் அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நா. பாலசுப்பிரமணிய சர்மா,
நுவரெலியா.

## வறுமைக்கு அஞ்ச வேண்டாம்




"இறைவா என் குடும்பத்தினருக்குப் போதிய அளவு வாழ்க்கைவசதிகளை அளிப்பாயாக! அதாவது, அவர்களுக்கு வாழ்க்கை வசதிகளை மிகவும் அதிகப்படுத்தி விடாதே! ஏனெனில் அவர்களும் அவ்வலையில் சிக்கிக் கொள்வார்கள்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் பிரார்த்தனை புரிந்தார்கள்'

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; "நான், உங்களின் வறுமையைப் பற்றி அஞ்சவில்லை. முன்னைய கூட்டத்தினரின் மீது வாழ்க்கை வசதி விரிவடைந்தது போன்று உங்களின் மீதும் விரிவடைந்து விடுமோ, அதில் அவர்களின் உள்ளங்கள் இலயித்தது போன்றுஉங்களின் உள்ளங்களும் இலயித்து விடுமோ வசதிப் பெருக்கு அவர்களை அழித்தது போன்று உங்களையும் அழித்து விடுமோ என்றே நான் அஞ்சுகிறேன்." (புகாரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "தேனிசை" செல்லப்பாவின் தமிழீழ எழுச்சிப் பாடல்கள்

## 23 ஆம் திகதி யாழ். முற்றவெளி மைதானத்தில்

யாழ்ப்பாணம், ஏப் 19 சுமார் 12 வருடங்களின் பின்னர் முதல்முதலாக யாழ்ப்பாணம், முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மாபெரும் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சியில் தமிழக எழுச்சிப் பாடகர் "தேனிசை" செல்லப்பா "தமிழீழ எழுச்சிப் பாடல்களைப்" படுவார்.

இதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவு செய்துள்ளது.

இந்த இசை நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

தமிழ் ஈழப் போராட்டத்தைப் பற்றியும் தமிழர் பிரச்சினை பற்றியும் தமிழகத்தின் மூலை முடுக்குகள் எங்கும் தெரியப்படுத்தியதில் திரு. செல்லப்பாவுக்கு முக்கிய பங்கு உண்டு.

இவர் தமது எழுச்சிப் பாடல்கள் மூலமும் வேறு



செல்லப்பா

வழிகள் மூலமும் ஈழத் தமிழரின் போராட்டதுக்கு தமிழக மக்களின் ஆதரவைப் பெற்றுத் தர தமது முழு ஆதரவைத் தந்துள்ளார்.

இவரது இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தை அடுத்து புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெற உள்ளது.

அதை அடுத்து தமிழ்பகுதிகளின் ஏனைய மாவட்டங்கள் எட்டிலும் சுமார் 14 நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் மற்றும் தலைவர்களுடன் திரு. செல்லப்பாவுக்கு 1981 ஆம் ஆண்டு முதலே தொடர்பு உண்டு.

1979 ஆம் ஆண்டு முதலே திரு. செல்லப்பா தமிழகத்தில் தமது ஈழப் போராட்ட அறிமுகத்தை ஆரம்பித்து விட்டார்.

இதனால் இந்தியவானொலி தூரதர்ஷன்போன்றவற்றில் அவருக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்புக்கள் இல்லாமல் போயிற்று.

தமிழீழ எழுச்சிப் பாடல்களில் அதிகமான பாடல்கள் திரு. செல்லப்பாவின் இசையமைப்புக்கு உட்பட்டவையே.

விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுக்கு விருப்பான "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலுக்கு இசையமைத்தவரும் திரு. செல்லப்பாவேதான்.

செல்லப்பாவின் இசைக் குழுவில் அவரது மகன் ஒருவரும், மகள்மார் இருவரும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ)

## வெளியுறவுச் செயலாளர் பதவி:
# டுபே நியமிக்கப்பட்டார்; டிக்ஸிற்றுக்கு இல்லை

புதுடில்லி, ஏப்ரல் 19 இந்தியாவின் புதிய வெளியுறவுச் செயலாளராக திரு. முகுந்த் டுபே நியமிக்கப்பட்டிருப்பதாக நேற்று புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

தற்போதைய வெளியுறவு செயலாளரான திரு. ஷைலேந்திர சிங் தன்னை இப் பதவியில் இருந்து விடுவிக்கும்படி கோரியதைத் தொடர்ந்தே புதிய செயலாளர் நியமனம் இடம்பெற்றது.

இவ்வருட ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படை விலகல் குறித்து திரு. டுபே கொழும்பு வந்து இலங்கை அரசு அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ஷைலேந்திர சிங்குக்கு அடுத்ததாக திரு. ஜே. என். டிக்ஸிற் வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

திரு. சிங்குக்கு அடுத்த சிரேஷ்டராஜதந்திரியாக திரு. டிக்ஸிற்றே இந்தியவெளியுறவு அமைச்சில் கருதப்பட்டு வந்தார். ஆனால் வெளியுறவுச் செயலாளர் பதவி அவருக்கு வழங்கப்படவில்லை (அ-எ)

# யாழ். கோட்டையை மாணவர் பார்க்கலாம்

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்கோட்டைப் பகுதியைப் பார்க்க பாடசாலை மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

83 ஆம் ஆண்டுக்குப் பின் கோட்டையின் உட்பகுதியை எவரும் பார்க்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

தற்சமயம் நிலைமை சீரடைந்துள்ளதை அடுத்து நேற்று முதல் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கோட்டைப் பகுதிகளைப் பார்க்க அனுமதி வழங்கப்பட்டது. நேற்று பாடசாலை மாணவர்கள் குழு ஒன்று அங்கு சென்று பார்வையிட்டது.

ஸ்ரீலங்கா பொலீஸ் - இராணுவ பாதுகாப்புடன் அவர்கள் கோட்டையைச் சுற்றிப் பார்த்தனர். (ஒ-3)

## பதில் சட்டமா அதிபர்

பதில் சட்டமா அதிபராக சொலிஸிட்டர் ஜெனரல் எஸ். டபிள்யு வதுகொடப்பிட்டியா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபர் சுனில் டீ சில்வா உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நியூசிலாந்து சென்றிருக்கிறார்.

## நாளைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப் 19 இவ்லின் இரத்தினம் பல்லினம் பண்பாட்டியல்] நிறுவனம் நடத்திவரும் கருத்தரங்குத் தொடரில் 'நாளை வெள்ளிக்கிழமை யாழ்-பல்கலைக் கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளைஜேர்மனியின் மீள் ஒற்றுமையும் அது எதிர்நோக்கும் பிரச்சனையும் என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

நாளை பிற்பகல் மூன்று மணிக்கு இவ்லின் இரத்தினம் நிறுவனத்தில் பேராசிரியரின் கருத்துரை ஆரம்பமாகும். [அ-3]

## மாங்குளத்தி. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என.

22-9-89ம் திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கே நகைகள் மீளளிக்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்களது நகைகள் அனைத்தும் இன்று முதல் 21 ஆம் திகதி வரை—3 நாட்களில் மீளளிக்கப்படும் என்று வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-94)

## அரசு- புலிகள் பேச்சு:
# எத்தகைய இணக்கத்தையும் மக்கள் கட்சி ஏற்கும்!

அரசு – விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் ஏற்படும் இணக்கம் எத்தகையதாக இருப்பினும் அதனை ஸ்ரீலங்கா மக்கள் கட்சியும் ஏற்றுக் கொள்ளும்.

கட்சியின் பொதுச் செயலாளர் வை. பி. டி. சில்வா இதனை தெரிவித்தார்.

அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னோடியாக விளங்கியவர் மறைந்த விஜயகுமாரணதுங்க ஆவார்.

அவரின் கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிறது என்றும் திரு. டி. சில்வா சொன்னார்.

## 21 பேரை கொலை செய்த இளைஞர் கைது!

கொழும்பு ஏப் 19 கோஷ்டி பகைமை காரணமாக தனது எதிரிகளில் 21 பேரைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் 21 வயது இளைஞர் ஒருவர் பாணந்துறைப் பொலீஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார். (உ-எ)

## இன்று- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுவார்கள்.

விழாவில் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இதே வேளை புளியங்குளம், கல்மடு, ஓமந்தை ஆகிய இடங்களிலும் விழாக்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-164)

## நளின்- - -

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில் வைத்து அதிகாரிகளிடம் வெளியிடுவார் என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

வடக்கே வரும் ஆளுநரும், அமைச்சர் திரு. அதிகாரியும் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்வாழ்வு நிவாரணம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து இங்குள்ள அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்துவார்கள் என்றும் –

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவின் உத்தேச வடபகுதி விஜயம் தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ 3)


## அன்னை பூபதிக்கு அஞ்சலி

பூகம்பவேளையில் போராடும் சோலை
பூபாளம் கேட்காமல் விடியாது காலை
பூபதி அம்மாவின் புகழ் மிகுபட்சோலை
பூமாதேவி அம்மாளின் வாடாத மாலை
மீன்பாடும் தேனாட்டில் வந்ததே பூஞ்சோலை
கார்மேகம் பொழியாமல் வற்றியதே பாலை
கலியுக மக்கள் அழியாமல் காக்கும் உன்வேலை
அம்பாறை தந்த அணையாத தீபமாம்

அன்னைக்கு அஞ்சலி

**வினாயகர் ஸ்ரோர்ஸ்**
(உதயன் ஏஜன்ட்)
யாழ்ப்பாணம் வீதி, திருமுறிகண்டி.

(12925)


## இளைஞர்களுக்கு என தனி வாக்காளர் இடாப்பு

கொழும்பு ஏப் 19 இளைஞர்களுக்கு என தனி வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்படவேண்டும் என்ற யோசனை சர்வ கட்சி மாநாட்டுப் பிரதிநிதிகளின் பரிசீலனையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட நிறுத்தப்படும் வேட்பாளர்களில் 40 சத வீதமானோர் இளைஞர்களாக இருக்க வேண்டும் என்ற யோசனையை இளைஞர் அமைதியின்மை பற்றி விசாரித்த ஜனாதிபதி ஆணைக் குழு சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே.

அந்த யோசனையைக் கட்டாயமாக ஒவ்வொரு அரசியல் கட்சியும் கடைப்பிடிக்கச் சட்டம் ஒன்று கொண்டு வருவது பற்றி சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் பரிசீலனை செய்து வருகின்றனர். (உ-எ)

## தராசுகளுக்கு சீல் வைப்பு!

கொழும்புத்துறை, ஏப் 19 யாழ். செயலகத்தில் இன்றும், நாளையும் அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் (சீல்) வேலைகள் நடைபெறவுள்ளன

யாழ். மாநகரசபை வியாபாரிகள், கல்வியங்காடு சந்தை வியாபாரிகள் அனைவரும் தங்கள் தராசுப்படிகள், லீற்றர், மீற்றர் அளவைகள் மற்றும் மேடை தராசுகள் போன்றவற்றுக்கு தவறாது முத்திரை இட்டுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

முத்திரையிடத் தவறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ். நிறுவைகள், அளவைகள் திணைக்கள பொறுப்பதிகாரி திரு கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ-30)

## 25 ஆயிரம் மாணவருக்கு 6 ஆம் ஆண்டு புலமைப்பரிசு!

கொழும்பு ஏப் 19 ஆறாம் ஆண்டில் புலமைப் பரிசில் பெறும்மாணவரின் எண்ணிக்கையை கல்வி அமைச்சு அதிகரித்துள்ளது.

நடப்பாண்டு முதல் ஆறாம் வகுப்பு பயிலும் 25 ஆயிரம் மாணவர்க்கு புலமைப்பரிசில் வழங்கப்படும் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்து இருக்கின்றார்.

சென்ற ஆண்டு 2 ஆயிரம் மாணவர்க்கே இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டது

அதற்கு முன்னர் ஆயிரத்து 500 மாணவர்க்கே இப்புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. (உ-எ)


## தச்சு வேலை பயிற்சி நெறி

மெதடிஸ்த திருச்சபை யாழ்ப்பாண சேகரமும் முள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்தும் தச்சுவேலை பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவங்கள், ஆனைக்கோட்டை கிராம எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து கோரப் படுகின்றன.

பயிற்சிக்காலம் – ஒன்பது மாதம்
வயதெல்லை – 15 — 30 வரை
முடிவுத் திகதி – 25- 04- 1990

விண்ணப்பபடிவங்களை முள்ளி தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

— நிர்வாகக்குழு

பழைய பொலிஸ் ஸ்ரேசனடி,
ஆனைக்கோட்டை.

(சி/4459)



## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**இராசதுரை இராஜநேசன்**
(பாப்பா)

பூவுலகில்: 12 - 12 - 1967
வானுலகில்: 04 - 05 - 1989

திதி: 20. 04. 1990
(வெள்ளிக்கிழமை)

வருடம் ஒன்று கடந்ததுவே,
வசந்தங்களை அவை எமக்கு மறுத்தனவே
சோகங்கள் என்பதே இங்கு பெரும் சுமையாகி
வெறும் தேகங்கள் மட்டுமே இப்போ இங்கு
எண்ணங்கள் எப்போதும் உனை சுற்றியே
அவை எப்போதும் கண்ணீர் சிந்துமே!

உமது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டும்.

அப்பா, அம்மா, அண்ணா,
தம்பி, தங்கை, நண்பன்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(12346)


## புதிய சவால் எதையும் நாம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தி நிற்கிறோம்.

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக, வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து, தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது. உலக வரலாற்றிலேயே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தை தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை, தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

அதனால்தான் இன்றைய தினத்தை, அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை, தேசிய எழுச்சி நாளாக, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, எத்தனையோ திருப்பு முனைகளை முகம் கொடுத்து, வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால் — மிகவும் ஆபத்தானதென்றால் — அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

### போராட்டத்துக்கு சவால்

இந்திய தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக எழுந்த மிகப்பெரியசவாலாக அமைந்தது. முதன் முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையை சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது, எமது மக்கள் மீது ஒரு முழு அளவிலான யுத்தம்ஏவிவிடப்பட்ட போது எமக்காக குரல் கொடுக்கவோ அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன் வரவில்லை. உலக வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இந்திய தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய சிங்கள அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்கு துணை போயின.

நாம் தனித்து நின்று இந்[illegible] தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத்தீயை அணைய விடாது போராடினோம்.

இறுதியில் நாம் வெற்றி கண்டோம்.

இந்த வெற்றிக்கு காரணம் எமது மனம் தளராத உறுதி; சாவுக்கும் அஞ்சாத எமது வீரம்; சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.


இந்த வெற்றியானது தமிழீழ மக்களாகிய உங்களது வெற்றி. உங்கள் குழந்தைகளாகிய எமது போராளிகளின் வெற்றி. உங்கள் இயக்கமாகிய விடுதலைப் புலிகள்இயக்கத்தின் வெற்றி.

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றி கொண்டு இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது. மலை போல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

இலட்சியத்தால்ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கி விட முடியாது.

இன்றைய எழுச்சி தினத்தில், இந்திய இராணுவஅரக்கனை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு எமது வீர அஞ்சலியை செலுத்துவோமாக. – இவ்வாறு அந்த அறிக்கையில் [illegible]க்கப்பட்டுள்ளது. (உ)


அணைந்த தீபத்தின்
## அழியாத நினைவாக



**சீவரத்தினம் சிறீபாஸ்கரன்**
(கப்டன் -வரதப்பா)

தாயின் மடியில்: 27 - 10 - 1964
தாயகமண்ணில்: 30 - 04 - 1989

திதி: 19 - 04 - 1990

கடந்த வருடம் இதேநாள் வீர வடுக்களுடன் உன் பூதவுடலை சுமந்து சென்றோம் மயானம் நோக்கி அன்று நீ எரிவதனை கலங்கிய கண்களுடன் நாம் பார்த்திருந்தோம், பரிதவித்தோம். இன்றும் அதேநாள் அதே மண்! உன் நினைவுகள் எம்மிடம் எழுகின்றன உன் மந்தகாச முறுவல்களை நாம் தரிசிக்கின்றோம். நாளை உன் கனவெல்லாம் நனவாகும் வேளையில் மீண்டும் ஒரு முறை வந்து போக மாட்டாயா.

உமது பிரிவால் கலங்கி நிற்கும்:
பெற்றோர், சகோதரர்.

தையிட்டி

(12933)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் மாதர் திலகம் தியாக பூபதிக்கு அஞ்சலி!

(அன்னை பூபதி மறைவையொட்டி, இரண்டு வருடங்களுக்கு முன்னர், 22 - 04 - 1988 இல் உதயனில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்தை இங்கே, மறுபிரசுரம் செய்துள்ளோம்.

அது அன்றைக்கும், இன்றைக்கும் என்றைக்கும் பொருந்துவதாக அமைந்துள்ளதால், அதனை வாசகர்களுக்கு, மீளத்தந்து அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்துகிறோம்).

ஈழத் தமிழர் அரசியல் சரித்திரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை புதியதோர் அத்தியாயம் எழுதப்பட்டுவிட்டது.

ஆம்! மட்டக்களப்பு அன்னையர் முன்னணியைச் சேர்ந்த தியாகியாம், அன்னை பூபதி கணபதிப்பிள்ளை வீர சுவர்க்கம் அடைந்த செய்தி தமிழர்களது அரசியல் வரலாற்றில் நிச்சயமாகவே புதிய வரலாறு தான்.

தமிழர்களின் கடந்த சுமார் அரை நூற்றாண்டு கால அரசியல் போராட்ட வரலாற்றில், அன்னை பூபதியின் தியாகம் முற்றிலும் புதியது - முன்னுதாரணம் காட்ட



உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்தபின் மீளாத்துயில் கொள்ளும் அன்னை பூபதி. அருகில் கணவர் கணபதிப்பிள்ளை, மகன், மகள், பேரப்பிள்ளைகள் சோகமே உருவாக அமர்ந்திருக்கின்றனர். (உ)

எதுவுமில்லாதது - தனித்துவமானது.

தமிழ் மகளிரின் மன உறுதியையும், இலட்சியப் பற்றையும் தளரா வீரத்தையும் எடுத்தியம்பும் பெருமைக்குரிய சம்பவம் அது. ஒரு தமிழ்ப் பெண், தமிழ் மக்களின் நலனை முன் வைத்து, அகிம்சைப் போராட்டம் நடத்தி, தனது இன்னுயிரைத் தியாகம் செய்து வீர சுவர்க்கம் அடைந்தது இதுவே முதற் தடவையாகும். அதனால் அன்னை பூபதி தமிழர் வாழும் வரை நினைவு கொள்ளப்பட வேண்டியவர்.

இலட்சியப் பற்றிலிருந்து விடுபடாது கொண்ட நோக்கத்திலிருந்து விலகிச் செல்லாது, கடைசி வரை போராட வேண்டும் என்ற முன்னுதாரணத்தை ஈழத் தமிழ்ப் பெண்களுக்கு எடுத்து கூறிய — செயலில் காட்டிய — முன்னோடியாகவும் மாதர் திலகமாகவும் வீரத் தாயாகவும் அவர் என்றென்றும் விளங்குவார்.

திருமதி பூபதி கணபதிப்பிள்ளை நிச்சயமாக ஓர் அரசியல்வாதி அல்லர். போராளியும் அல்லர். சாதாரண குடும்பத் தலைவி ஐந்து- பிள்ளைகளின் அன்புத் தாய். அவர்களை அன்புடனும், பாசத்துடனும், சீராட்டித் தாலாட்டி வளர்த்தவர். அந்த பிள்ளைகள் நல்ல நிலையில் வாழ வேண்டும்; அவர்கள் இவ்வாறு வாழ்வதைத் தன் கண்ணாரக் கண்டு மகிழ வேண்டும் என்று எந்தத் தாய்க்கும் இருக்கும் ஆசை அன்னை பூபதிக்கும் இருந்திருக்கும்.

ஆனால் அந்த தனிப்பட்ட அன்பு, பாசம், ஆசை எல்லாவற்றையும் துறந்து, தமிழ் மக்கள் நலனுக்கு தன்னை அர்ப்பணித்து விட வேண்டும் என்ற மனிதநேயம் அவரை உந்திச் செயற்பட வைத்தது.

அதனால் தான் அவர் சாதாரண தாய் என்ற நிலையிலிருந்து, தமிழ் மக்களின் அன்னை என்ற நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ள முடிந்தது. அது மட்டுமா? தான் கொண்ட இலட்சியம் நிறைவேறாவிடில் தனது உயிரைத் தியாகம் செய்யும் மன உறுதியும் அவரிடம் இருந்தது. அதனால் அவர் தமிழ் அன்னையரில் ஒரு மகாத்மா ஆகிவிட்டார் என்றால் மிகையாகுமா?

அன்னை பூபதி எதற்காக ஒரு மாதகாலம் உண்ணா நோன்பிருந்து தனது இன்னுயிரை நீத்தார்?

தமிழ்ப் பிரதேசங்களில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும் என்ற பரந்த பண்புள்ள கோரிக்கையை முன் வைத்துத் தான் அன்னை பூபதி தமது அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவரது கோரிக்கையை நாகரீக உலகில் வாழும் எவரும் நியாயமற்றது என்று உதாசீனம் செய்துவிடமுடியாது. அவரது கோரிக்கையே இன்றைய தமிழர்களின் முதற் தேவையாகவும் விளங்குகிறது.

உண்ணா நோன்பிருக்குமாறு தம்மை எவரும் நிர்ப்பந்திக்கவில்லை என்றும், தமது போராட்டத்தை எவரும் குறுக்கு வழியில் முடித்துவிடத் தாம் இடம் கொடுக்கப் போவதில்லை என்றும் அன்னை பூபதி எழுத்து மூலம் உறுதி செய்திருந்தார்.

ஆகவே அவரது போராட்டம் தூய்மையானது. இந்தியா நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும். என்பது அன்னையின் கோரிக்கையின் மூலாம்சம்.

ஆனால் அகிம்சைப் போராட்டத்தை உலகுக்கு அறிமுகம் செய்த அண்ணல் காந்தியை தேசபிதாவாகக் கருதும் இந்தியா, அன்னையின் கோரிக்கையை நிறைவேற்ற முயற்சி தானும் செய்ததாகவும் செய்திகள் இல்லை. இது பெரும் வேதனைக்குரிய விடயம்.

இந்த விவகாரத்தில் இந்தியா சிரத்தையின்றி, அசட்டையாக இருந்தது ஏன் என்று தெரியவில்லை.

எது எப்படியானாலும், யாழ்ப்பாணத்தில் போராளி திலீபனின் உயிரைக் காப்பாற்ற முடியாமற் போனதும். மட்டக்களப்பில் அன்னை பூபதியின் உயிரைக் காப்பாற்ற முடியாமற் போனதும் அகிம்சை தனக்குரிய மதிப்பையும், மகிமையையும் இழந்து வருகிறதா என்ற சந்தேகத்தை வலுக்கச் செய்கிறது. ★

## நாமம் வாழ்க என்றும்!

அந்நியக் கரங்களில் இருந்து
மண்ணையும் மைந்தர்களையும்
விடுவிக்கத் தன்னுயிரை ஈந்த
அன்னை பூபதி எனும் தியாகத்தாய்
நாமம் வாழ்க என்றும்!
தமிழுக்கும் தமிழர்க்கும் பெருமை நீ!
தரணியில் போருக்கும் தியாகத்துக்கும்
அழியாத புகழ்த் தீபம் நீ!
புவியெங்கும் உன் நாமம் பரவி வாழும்!

## அன்னையர் திலகம் பூபதி

1988 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி.

அந்தத் தினத்தில் தான் அன்னை பூபதி என்று இப்போது நாம் எல்லோரும் அன்புடன் அழைக்கும் அந்தத்தியாகத்தாய் தன்னுயிரை நீத்தார். மட்டக்களப்பு அன்னையர் முன்னணியைச் சேர்ந்த அன்னை பூபதி தமிழ் மக்கள் நலனை நாடி இந்திய அமைதிப்படை நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்து அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்ற கோரிக்கையைமுன்வைத்து உண்ணா விரதம் இருந்தவர்.

அவர் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் மார்ச் 19 ஆம் திகதி முதல் 31 நாட்கள் உண்ணா விரதம் இருந்து ஏப்ரல் 19 ஆம் திகதி உயிர் நீத்தார். இவருக்கு முன் இதேகோரிக்கையைமுன் வைத்து உண்ணா விரதம் இருந்த திருமதி டேவிட் அன்னம்மா சிகிச்சைக்கெனக் கூறி இந்திய அமைதிப்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப் பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்தே திருமதி பூபதி கணபதிப் பிள்ளை (58 வயது) மார்ச் 19 ஆம் திகதி உண்ணா விரதம் இருக்க ஆரம்பித்தார்.

### தீபன்

திருமதி பூபதி கணபதிப் பிள்ளையின் 5 பிள்ளைகளில் 2 ஆண் பிள்ளைகள் 1986 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்காப் படையின் வேட்டுக்குப் பலியானார்கள். மேலும் ஒருவர் அன்னை பூபதி உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது பூஸா முகாமில் இருந்தார். எவருடைய வற்புறுத்தலும் இன்றி சுய விருப்பத்தின் பேரில் தமிழ் மக்களின் நலனுற்காக குடும்பத்தின்ஆதரவுடன் உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்த திருமதி பூபதி கணபதிப் பிள்ளை இன்று தமிழ் இனத்தின் தன்னிகரற்ற அன்னையாக மிளிர்கிறார்.

அவர் எந்தக்கோரிக்கையை முன் வைத்துப் போராடினாரோ அந்தக் கோரிக்கையும் நிறைவேறி உள்ளது.

இந்தியப் படைகள் நிபந்தனையின்றி எமது நாட்டை விட்டு வெளியேறியுள்ளன. அமைதியும் பிறந்திருக்கிறது.

இந்த அமைதி நிரந்தரமானதாக வேண்டும் என்பதே இன்று அனைவரினதும் ஆசையான எதிர்பார்ப்பாகும்.

தான் கொண்ட இலட்சியத்துக்காக தன்னுயிரை ஈந்து, பழந்தமிழ் இலக்கியத்தில் போரில் வீரமரணமெய்திய தமிழ்த் தாய்மாரை மீண்டும் வரலாற்றில் அன்னை பூபதி வடிவத்தில் கண்டோம்.

அமைதிக்காகப் போராடிய வீரப்போராளி அன்னை பூபதி. இலட்சியத்திலிருந்து மாறாத மனஉறுதி படைத்த மாண்புடைத் தாய் அன்னை பூபதி அவருக்கு அஞ்சலி செலுத்துவது தமிழர்கள் எல்லோரதும் கடமை. அவர்களுக்கு அது பெருமை.

அன்னை பூபதியின் இரண்டாவது வருட நினைவு நாளில் அவரது தியாகத்துக்கும், இலட்சிய உறுதிக்கும், வீரத்துக்கும் தலைசாய்த்து அஞ்சலி செய்வோமாக. ★

எமது முன்னேற்றத்திற்கு வாழ்வு
பயன்படுவது போன்று
சாவும் பயன்படுகிறது என்பதை
இறைவன் எமக்குப் புகட்டி அருள்கிறான்

★ மில்க்வைற் ★
யாழ்ப்பாணம்.

தமிழர் தம் நல்வாழ்வுக்காக தமது இன்னுயிரை ஈந்த
அன்னை பூபதி என்றும் தமிழர் எம் இதயங்களில் வாழ்வார்!

★

DHL International
C/o COSMOS MARKETING SERVICES,
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தியாக தீபம்
அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலிகள்!



ஷப்றா ஊழியர்கள்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

### றிசேர்வ் பொலிஸ். . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை முதல் நடைபெறும். ஏற்கனவே முறைப்படி விண்ணப்பிக்காதவர்களும், நாளை முதல் நடக்கும் நேர்முகப்பரீட்சையின் போது சென்று பதிவு செய்து கொண்டு பரீட்சைக்குச் சமுகமளிக்கலாம்.

அனுமதிக்கப்பட்ட 450 பேர்களுக்குமான நேர்முகப் பரீட்சை நடந்து முடிய இரண்டு மூன்று தினங்கள் ஆகலாம் என்று யாழ் பொலீஸ் நிலைய வட்டாரங்கள் எதிர் பார்க்கின்றன.

புதிதாகச் சேர்க்கப்படவிருக்கும் றிசேர்வ் பொலீஸ் உத்தியோகத்தர்களில் றிசேர்வ் உப பொலீஸ் பரிசோதகர்சள், றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள்கள், றிசேர்வ் பெண் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோரும் அடங்குவர்,

புதிதாக 'உள்ளே வாருங்கள்' (Walk- In – Interview) நேர்முகப் பரீட்சைக்குச் செல்வோரின் நன்மை கருதி 'அந்தந்தப் பதவிகளுக்கு வேண்டிய தகைமைகளை இங்கு வெளியிடுகிறோம்.

அவை வருமாறு:-

றிசேர்வ் உப - பொலீஸ் பரிசோதகர் (R. S. I) பதவிக்கு விண்ணப்பிப்போர் ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்

அவற்றில் கணிதம், தமிழ் உட்பட 4 பாடங்களில விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும். 5 அடி 6 அங்குலம் உயரமுடையவர்கள் தகுதியுடையவர்கள்.

றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு (R.P.C) 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருந்தால் போதுமானது, 5 அடி 4 அங்குலம் உயரமுடையவர்கள் தகுதியுடையவர்கள்.

றிசேர்வ் பெண் பொலீஸ் கான்ஸ்டபிள்(R. W. P C) பதவிக்கு சணிதம், தமிழ் உட்பட ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். ஆகக்குறைந்தது 5 அடி உயரமுடையவர்களாக இருக்க வேண்டும்.

இந்த பதவிகளுக்கு திருமணமாகாதவர்களே விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் நாளை வெள்ளிக்கிழமை நேர்முகப் பரீட்சை நடைபெறும். திருகோணமலையில் சனிக்கிழமை இடம்பெறும். (அ-3-9)

### அடகு நகை- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ன்லி வீதிக் கிளைகளில் 15-10-89 வரையும்—

யாழ்–கன்னாதிட்டி, சங்கானை கிளைகளில் 12-10-89 வரையும்—

சுன்னாகம் கிளையில் 11-10-89 வரையும்—

காங்கேசன்துறைக் கிளையில் 18-10-89 வரையும்—

வல்வெட்டித்துறைக் கிளையில் 10-10-89 வரையும்—

ஊர்காவற்றுறை கிளையில் 25-09-89 வரையும்—

பருத்தித்துறை, நெல்லியடி கிளைகளில் 19-09 89 வரையும்—

பணம் செலுத்தியவர்களின் நகைகளே மீளளிக்கப்படும் என்று வங்கி பிரதி பிராந்திய முகாமையாளர் திரு எஸ். சிவசிதம்பரம் தெரிவித்தார். (ஒ-3)

### பத்தரமுல்ல- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

''நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு 205 பேருக்கே அழைப்பு முதலில் அனுப்பப் பட்டது. ஏனையோருக்கு அனுப்புவதற்காக கடிதங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை இன்னும் அஞ்சல் செய்யப்படவில்லை. அதற்கு முன்னரே தகவல் கிடைத்து பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் வடக்கு, கிழக்கிலிருந்து வந்து இங்கு கூடிவிட்டனர். இதனால் இங்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுவிட்டது'' - இப்படி அந்த அதிகாரி மேலும் சொன்னார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அனுமதிக்காக கடந்த மாதம் நடுப் பகுதியில் ஏற்கனவே ஒரு தடவை நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றிருந்தன (உ-2)

### இடைக்கால . . .

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

வது:-

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளேமாகாண சபையில் அங்கம் வகிக்கவேண்டும்.

மக்களால் நிராகரிக்கப்பட்ட எந்தக் குழுக்களையும் கொண்டு அமைக்கப்படும் எந்த நிர்வாக அமைபபிலும் விடுதலைப்புலிகள் பங்குபற்ற மாட்டார்கள்.

அப்படியான எந்த ஒரு முயற்சியையும் எமது இயக்கம் எந்தத் தரப்பில் இருந்து அது வந்தாலும் எதிர்க்கும் — என்றார். (ஒ-2)

### மட்டுநகரில் - - -

இணைப்பாளர் திரு. விசு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை பிராந்தியத் தளபதி திரு. கருணா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிராந்தியத் தளபதி திரு. கரிகாலன், இருதயபுரம் மேற்கு சிற்றூர் அவைத் தலைவர் திரு பிரான்ஸிஸ், ஜனாப். ஏ. எல். அப்துல் சையூம், அன்னை பூபதி நினைவுக் குழுவைச் சேர்ந்த திருமதி ஜெபமணி லோறன்ஸ் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் உரையாற்றுவர்.

அன்னை பூபதி வெற்றிக் கிண்ணத்துக்காக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களுக்கு அன்னை பூபதியின் கணவர் திரு. கணபதிப்பிள்ளை வெற்றிக் கிண்ணங்களை வழங்குவார்.

அன்னை பூபதி நினைவு அஞ்சலி மலர் வெளியீடு, கவியரங்கம், திமிலைத் துமிலன் தலைமையில் ''தியாகத் தீயில் செந்தமிழ்ப் புலிகள்'' என்ற வில்லுப்பாட்டு, புனித திரேஸா மகளிர் வித்தியாலய மாணவிகள் வழங்கும் எழுச்சி கீதங்கள் ஆகியவையும் நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்ட அவை அமைப்பாளர் திரு. தீபன் நன்றியுரை நிகழ்த்துவார். (உ)

### நல்லூரில்- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் பஸ்களும் இரத வாகனங்களும் இலவசமாக சேவையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டம் ஆரம்பமாகும் வரை முன் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சி பகுதியிலிருந்து வருபவர்கள் தமது வாகனங்களை முத்திரை சந்தியில் நிறுத்திவிட்டு வரும்படியும் -

தென்மராட்சியிலிருந்து வருபவர்கள் நல்லூர் கைலாசப் பிள்ளையார் ஆலயத்திலும் -

தீவுப் பகுதியிலிருந்து வருபவர்கள் நல்லூர் திலீபன் நினைவு தூபிக்கு அண்மையிலும் வாகனங்களை நிறுத்திவிட்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது

இதேவேளை வலிகாமம் பகுதி மக்கள் அனைவரும் கந்தர்மடத்திலிருந்து ஊர்வலமாக நல்லூரில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் வரை வந்துசேர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிய இயந்திராதிகளுக்கு விற்பனை முகவர்கள் தேவை

★ நாம் இறக்குமதி செய்யும் சர்வதேசப் புகழ்மிக்க பின்வரும் வகைகளைச் சார்ந்த பாரிய இயந்திராதிகளுக்கு,

யாழ்ப்பாணம்
திருகோணமலை
மட்டக்களப்பு

★ ஆகிய பட்டினங்களில் விற்பனை முகவர்கள் தேவை.

★ எல்லா வகையான Caterpillar மண் அகற்றும் எந்திரம். மின்சார ஜெனரேற்றர்கள், Hyster மற்றும் Nissan பாரம் உயர்த்தும் ட்ரக்குகள், Hamm வீதி றோலர்கள், Wellux மின்சார ஜெனரேற்றர்கள், Timberjack, Scania ட்ரக்குகள், ட்றெயிலர்கள், பஸ்கள், Lincoln வெல்டிங் உபகரணம் முதலியன.

★ விற்பனை முகவர்களாக இருக்க விரும்புபவர்கள் பட்டினத்தில் போதிய அலுவலக இடவசதி, காட்சியறைகள், பணியாளர் போக்குவரத்து வசதி என்பன கொண்ட பிரபல வர்த்தகர்களாக இருக்க வேண்டும். இயந்திராதிகளைப் பராமரித்து சிறு சிறு பழுது பார்ப்பதற்கான வசதிகள் இருப்பது விரும்பத்தக்கது. ஏப்பிரல் 30ஆந் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும்.

முகாமைப் பணிப்பாளர்,
யுனைட்டட் ட்றாக்டர் அன்ட் எக்குயிப்மென்ட் லிமிடெட்,
447, யூனியன் பிளேஸ்,
கொழும்பு - 2.


★ லித்துஏனியா மீதான பொருளாதார முற்றுகையால்

# அமெ - ரஷ்ய நாடுகளுக்கு இடையே மீண்டும்பனிப்போர் ஏற்படும் ஆபத்து

## வெள்ளை மாளிகை எச்சரிக்கை

வாஷிங்டன் ஏப் 18

லித்துஏனியா மீது பொருளாதார முற்றுகை விதிக்கப்பட்டால் அது அமெரிக்க சோவியத் வர்த்தக உறவுகளைப் பாதிக்கும் என்று வெள்ளை மாளிகை நேற்று அறிவித்தது.

எதிர்வரும் மே 30 அம் திகதி நடைபெற நிச்சயம் செய்யப்பட்டுள்ள புஷ் - கோர்பச்சேவ் உச்சி மாநாடும் ரத்துச் செய்யப்படும் ஆபத்தும் இருப்பதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த டிசம்பரில் மோல்டாவில் நடந்த புஷ் - கோர்பச்சேவ் உச்சி மாநாட்டைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவுகள் துரிதமாக வளர்ச்சி அடைந்து வந்தன.

லித்துஏனிய பிரச்சினை, இந்த உறவை பாதிக்கும் கட்டம் வந்துள்ளது.

இதனால் கைவிடப்பட்டிருந்த 'பனிப்போர்' மீண்டும் இரு நாடுகளுக்கு இடையே ஏற்படும் ஆபத்து தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ)

## விஸ்தரிப்பு

இந்திய மத்திய அமைச்சரவை வாரஇறுதியில் விஸ்தரிக்கப்பட இருக்கிறது.

மூன்று கட்ட அமைப்புக்களாக அமைச்சரவை அமையும் என்று பிரதமர் வி.பி. சிங் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு முதல் தடவையாக தெரிவு செய்யப் பட்டவர்களுக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட உள்ளது.

இப்போது 22பேர் கொண்ட அமைச்சரவையே உள்ளது

## இந்திய அமைச்சர் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப்ரல் 18

பஞ்சாப்பில் தீவிரவாதத்தையும் காஷ்மீரில் பிரிவினைவாதத்தையும் பாகிஸ்தான் வளர்த்து வருகிறது.

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் முப்டி செய்யத் முகமது முன் கண்டவாறு குற்றஞ் சாட்டினார். (எ)

## லீலாவதி பதவி நீக்கம்

சென்னை, ஏப்ரல் 18

எம்ஜிஆரின் சகோதரரான சக்கரபாணியின்மகள்லீலாவதி திமுகவில் இருந்து நீக்கப்பட்டார்.

அண்மையில்தான் திமுகவில் திருமதி லீலாவதி சேர்ந்தார்.

திமுக கட்டுப்பாடுகளை மீறி நடந்து கொள்வதாகக் கூறி அவர் நீக்கப்பட்டதாக திமுக அமைப்புச் செயலாளர் நீலநராயணன் அறிவித்தார். (எ)


## ★ கொம்பியூட்டர் கல்வி ★

Diploma in Data Processing and Computer Programming in Basic Language

புதிய வகுப்புகள் ஆரம்பமாகும் விபரம்:-

| இடம்: | ஆரம்ப திகதி நேரம் |
|---|---|
| 1. பருத்தித்துறை வேலாயுதம்) மகாவித்தியாலயம் முன்பாக) | 21 - 4 - 1990 சனி மாலை 2 மணி |
| 2. வல்வை கல்வி மன்றம் (வல்வெட்டித்துறை) | 21 - 4 - 1990 சனி காலை 8 மணி |
| 3. தெல்லிப்பளை (புகையிரத நிலையம் முன்பாக) | 23 - 4 - 1990 திங்கள் காலை 8 மணி |

1988, 89, 90 ஆம் ஆண்டுகளில் G.C.E. (O/L), (A/L) எடுத்தவர்கட்கு இலவச சலுகைக்கான விபரங்கட்கு 4 - 4 – 1990 ம் திகதி ஈழநாதம், 7 – 4 – 1990ம் திகதி சஞ்சீவி பத்திரிகைகளைப் பார்க்கவும் மேற்படி பரீட்சை எடுத்தவர்கட்கான ஆகக்கூடிய

கட்டணம் 750/- மட்டுமே. இச்சலுகை 23-4-90ம் திகதிக்குப் பின்னர் வழங்கப்படமாட்டாது.

மேற்கொண்டு விபரமறிய விரும்புவோர் வகுப்பு ஆரம்பநாளில் நேரில் வரவும்.

Director,
OSCO COMPUTER CENTRE,
Kankesanthurai.

(3313)



ஓம் நமசிவாய

## முதலாவது பிறந்த தின வாழ்த்து



## ★ குணசிங்கம் சிவஜன் ★

குணசிங்கம் வனிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிவஜன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று 19 - 4 - 90 கனடாவில் தனது அப்பா, அம்மா, அண்ணா சிவனுஜன், ஆகியோருடன் குதூகலமாய் கொண்டாடுகிறார். இவரை நல்லூர் அம்மப்பா, அம்மம்மா, ஜெகதீசன் பெரியப்பா, பெரியம்மா, சிற்பரன் அண்ணா, நித்திலா அக்கா, வவுனியா கணேசலிங்கம் பெரியப்பா, பெரியம்மா, தாறா அக்கா, நிலோ அக்கா, லசோ அக்கா, கரம் பொன் Dr. மாமா, மாமி, கஜன் மச்சான், கயாத்திரி மச்சாள், K. K. S. பாலசிங்கம் பெரியப்பா; இராசையா, மாமா, மாமி, தயா மச்சான் (சவூதி), குமணா மச்சான், கேசினி மச்சாள், ஏழாலை, இரத்தினசிங்கம் பெயரிப்பா, பெரிபம்மா. யாழினி அக்கா, அகழினி அக்கா, அஜந்தன் அண்ணா, டினேசன் அண்ணா, டிலீபன் அண்ணா, ஆகியோர் யாழ். நல்லூர் கந்தன் திருவருளால் பல்கலையும் கற்று அன்பும் பண்பும் பெருகி பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (3308)



# மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் கீழ்க்கண்டவாறு மீளளிக்கப்படும்.

### யாழ். மாவட்டக் கிளைகள்:-

வழங்கும் திகதி: 20—04—1990 வெள்ளிக்கிழமை
வழங்கும் இடம்: யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் (யாழ். கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது)

| | | |
|---|---|---|
| 1. | யாழ். பிரதான வீதிக் கிளை புங்குடுதீவுக் கிளை | 12-10-1989 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 2. | யாழ். நவீன சந்தைக் கிளை | 10-10-1989 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 3. | சாவகச்சேரிக் கிளை பளைக் கிளை | 15-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 4. | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை | 15-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 5. | யாழ். கன்னாதிட்டிக் கிளை சங்கானைக் கிளை | 12-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 6. | சுன்னாகம் கிளை | 11-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 7. | காங்கேசன்துறைக் கிளை | 12-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 8. | வல்வெட்டித்துறைக் கிளை | 18-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 9. | ஊர்காவற்றுறைக் கிளை | 25-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |
| 10. | பருத்தித்துறைக் கிளை நெல்லியடிக் கிளை | 19-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு |

### 2. கிளிநொச்சி மாவட்டம்.

வழங்கும் இடம்: கிளிநொச்சி தபாற் காரியாலயம்

| | | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|---|
| 1. | பரந்தன் கிளை | (28-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 20-04-90 | வெள்ளி |
| 2. | கிளிநொச்சிக் கிளை | (26-06-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 24-04-90 | செவ்வாய் |

### முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு கிளை:
இக்கிளையில் அடகு வைத்த நகைகளை மீளப் பெறுவதற்காக 21-09-1989 திகதிவரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு ஜெசி தியேட்டரில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் விசேட கரும பீடத்தினூடாக மீளளிக்கப்படுகின்றது.

மாங்குளம் கிளை:
இக்கிளையில் அடகு வைத்து மீளப்பெறுவதற்காக 22-10-1989 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 18ஆந் திகதி முதல் (புதன் கிழமை) மாங்குளம் மக்கள் வங்கியில் வைத்து மீளளிக்கப்படும்.

### வவுனியா மாவட்டம்

வவுனியாக் கிளை:
இக்கிளைக்குரிய 1ஆம் கட்ட நகைகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து இம் மாதம் 18ஆந் திகதி முதல் மீளளிக்கப்படும்.

### மன்னார் மாவட்டம்

மன்னார் கிளை:
இக் கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 21-09-1989 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம் மாதம் 20ஆந் திகதி முதல் மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

முருங்கன் கிளை:
இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 21-09-1989 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 25ஆந் திகதி முதல் (புதன் கிழமை) மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

● மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

- பிராந்திய முகாமையாளர்

[4455]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வரையறுக்கப்பட்டது) 127, காங்கேசன்துறை வீதி, பெரிய கடை யாழ்ப்பாணம்

கட்டிடத் திருத்த வேலைகளுக்கான

## கூறுவிலை கோரல்

மேற்படி எமது சங்க தலைமை அலுவலகக் கட்டிடத்தில் உள்ள திருத்தங்கள் செய்வது தொடர்பாகச் செய்யப்பட வேண்டிய மேசன் வேலை, தச்சு வேலை, மின் இணைப்புப் பொருத்துக்கள், நீர் விநியோகம் செய்தல் ஆகிய வேலைகளுக்கு தகுதி வாய்ந்த கேள்விக்காரரிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்குப் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
யாழ். ப. நோ. கூ. சங்கம்

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
17-4-1990 (ஒ/4298)



## முக்கிய அறிவித்தல்

திருநெல்வேலி அரசடி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள்
தேர்த்திருப்பணிச் சபை

மேற்படி ஆலயத் தேர்த் திருப்பணிச் சபை தொடர்ந்தும் தமது திருப்பணியை நடாத்தி வருகின்றதென்றும் திரு சண்முகம் தணிகாசலம், சமாதான நீதவான் ஒழுங்குமுறைகளை உதாசீனம் செய்து 8 - 4 - 1990 அன்று இது சம்பந்தமாக ஓர் அறிவித்தலை பத்திரிகைகளில் பிரசுரித்த காரணத்தினால் 12 - 4 - 1990ல் நடந்த தேர்த் திருப்பணிச் சபைக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் படி இவரை இச்சபையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தேர்த் திருப்பணியைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு அடியார்கள் பணத்தைத் தொடர்ந்தும் 21 - 3 - 1989 ல் நிறுவப்பட்ட திருப்பணிச்சபைத் தனாதிகாரி திரு. ம. பாலசுப்பிரமணியத்திடம் ஒப்படைத்து அதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
கு. ஜயக்குமார், காரியதரிசி.
அ. முத்துக்கிருஷ்ணன், தலைவர்.
(14233)


# தமிழ் எழுத்துக்களில் மீண்டும் சீர்திருத்தம் வருமா?

சென்னை, ஏப் 19

தமிழ் எழுத்துக்களில் மீண்டும் சீர்திருத்தம் செய்வது தமிழக அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை தமிழ் நாடு கல்வி அமைச்சர் அன்பழகன் தமிழ் நாடு சட்ட சபையில் கடந்த வாரம் வெளியிட்டார்.

தமிழ் எழுத்துச்சீர்திருத்தம் பற்றி இந்திரா காங்கிரஸ் எம் எல் ஏ குமரி அனந்தன் சட்டசபையில் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

எழுத்துச்சீர்திருத்தம் பற்றி பேராசிரியர் குழந்தை சாமியிடம் இருந்து அரசுக்கு அறிக்கை ஒன்று கிடைத்திருப்பதாக அறிகிறோம்.

தமிழ் எழுத்துக்களில் இ, ஈ, உ, ஊ என்ற நான்கு எழுத்துக்களின் காரணமாக 76குறியீடுகளைஅதிகம் படிக்கவேண்டியுள்ளது.

எனவே தமிழக அரசு மிருந்த வீச்சோடும் முச்சோடும் எழுத்துச் சீர்திருத்தத்தை நிறைவேற்றுமா?

அத்துடன் தற்போதைய எழுத்துச் சீர்திருத்தத்தால் தட்டச்சில் இன்னும் 26 குறியீடுகளை குறைத்து விடலாம் தமிழ்எழுத்து நன்கு வளர்ந்து வர அரசு இந்த நடவடிக்கையை எடுக்குமா?.

அமைச்சர் அன்பழகன்; தமிழ் எழுத்துக்களில் மேலும் சீர்திருத்தம் செய்யும் யோசனை முதலமைச்சரது ஆலோசனையில் உள்ளது. என்பதுஉண்மையே.

இதுகுறித்து இன்னும்முடிவு எடுக்கப்படவில்லை தொடர்ந்து ஆலோசிக்க வேண்டியுள்ளது.

ஏனென்றால் எழுத்துச் சீர்திருத்தத்தால் பழைய சுவடி அமைப்பு மாறிவிடும் என்று ஒருசாராரும் எழுத்துச்சீர்திருத்தம்வராவிட்டால்வளர்ச்சி இருக்காது என்றுஇன்னொரு சாராரும் கூறிவருகின்றனர்.

எனவே இப்பிரச்சனை இன்னும் ஆய்வில் உள்ளது என்று அமைச்சர் அன்பழகன் கூறினார். [இ-எ]

## கலை - இலக்கிய துறைகளில் மாணவர் ஈடுபடவேண்டும்

கோப்பாய் ஏப் 19

தற்போது ரியூட்டரிகளை நம்பி பிள்ளைகளின் கல்விக்காக நாம் பெரும் பணம் செலவு செய்து வருகின்றோம் பிள்ளைகள் விளையாட்டுத் துறை, கலைத்துறை, இலக்கியத்துறை போன்றவற்றில் ஈடுபட நாம் உதவவேண்டும்.

கோப்பாய் இந்துமா மன்ற அங்குரார்ப்பணக்கூட்டத்தில் உரையாற்றிய பொ. விக்னேஸ்வரலிங்கம் இவ்வாறு கூறினார்.

கூட்டத்துக்கு திரு. சி. க. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். இந்துமா மன்ற செயலாளர் சோ. சுப்பிரமணியக்குருக்கள் ஆகியோரும் உரையாற்றினார்கள். [க-72]

## பாடசாலை வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு

மாங்குளம் ஏப் 19

''ஆரம்ப பாடசாலையாக இருந்த இப்பாடசாலை வேகமாக வளர்ந்து இப்போது மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்படவிருக்கிறது. இவ்வளர்ச்சிக்கான காரணம் பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் ஆகியோரது ஒத்துழைப்பும் பங்களிப்புமேயாகும்.''

முள்ளி வாய்க்கால் மேற்கு தமிழ் வித்தியாலயத்தில் புதிய கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ் மனோகரன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு கொத்தணி அதிபர் முல்லைமணி திரு. வே. சுப்பிரமணியமும் இத்திறப்பு விழாவில் உரையாற்றினார். (இ 94)

## கெயர் பணிப்பாளர் யாழ்நகரில்

யாழ்ப்பாணம்.ஏப்.19

சர்வதேச கெயர் ஸ்தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் செல்வி வெண்டிஸ் ரோஜன் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இந்தஸ்தாபனம் மேற்கொண்டுள்ள தொழில் பயிற்சி திட்டங்களை அவர் பார்வையிட்டதுடன் மேலும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்தார். (இ-3)

## மாங்குளம் மின்னொளிக்கு வெற்றி

மாங்குளம், ஏப்ரல் 19

அன்னை பூபதி நினைவாக ஒட்டுசுட்டானில் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையே அண்மையில் நடைபெற்ற போட்டிகளில் ஒட்டுசுட்டான் தினேஷ் கழகத்துடன் மோதிய மாங்குளம் மின்னொளிக் கழகம் 0-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (இ-94)

## மாட்டு வண்டிச்சவாரியில் வெற்றியீட்டியோர் விவரம்

மானிப்பாய், ஏப் 19

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவினரால் மருதனாமடம் சந்திக்கு அருகாமையில் நடத்தப்பட்ட மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:-

'ஏ' பிரிவு: 1 ஆம் இடம் திரு. செல்லையா இளையதம்பி - கரவெட்டி, 2 ஆம் இடம் திரு. இராமநாதன் அகிரதன் - பண்டத்தரிப்பு, 3 ஆம் இடம் திரு. சக்திவேல் பிரதீபன் - சங்குவேலி, 4 ஆம் இடம் திரு. கனகரட்ணம் விக்கினேஸ்வரன் - உடுவில்.

'பி' பிரிவு: 1 ஆம் இடம் திரு. இலங்கையர் திருச்செல்வம் - மாரீசன்கூடல், 2 ஆம் இடம் திரு. வேலுப்பிள்ளை கனகரட்ணம் - உடுவில், 3 ஆம் இடம்: திரு. நடராசா தில்லைராசா - வட்டுக்கோட்டை.

'சி' பிரிவு: 1 ஆம் இடம் திரு. சிவசுப்பிரமணியம் ஸ்ரீதரன் - வட்டுக்கோட்டை, 2 ஆம் இடம் திரு. இராமநாதன் அகிரதன் - பண்டத்தரிப்பு, 3ஆம் இடம் திரு. தம்பையா கந்தையா - அச்செழு, 4 ஆம் இடம் திரு. கந்தையா சற்குணம் - அளவெட்டி. (இ-9)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்

1. மருத்துவ பேராசிரியர்
2. உடலமைப்பியல் பேராசிரியர்
3. மனநோயியல் பேராசிரியர் இ-
4. அங்கக் கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத்தவிசு
5. கழலையியல் அறக்கொடைத்தவிசு
6. நோயியல்/ ஒட்டுண்ணியியல்/ நுண்ணுயிரியல்/ உடற்றொழிலியல்/ மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ அறுவை மருத்துவம்/ சமூக மருத்துவம்/ சட்டமருத்துவம்/ மருந்தியல்-விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
7. உடற்றொழிலியலில் உதவி விரிவுரையாளர்/தற்காலிக உதவி விரிவுரையாளர்
8. உடலமைப்பியலில்/ அறுவை மருத்துவத்தில் தற்காலிக விரிவுரையாளர்.

சம்பள அளவுத்திட்டம்:

1. பேராசிரியர் தரம் 11 ரூபா 12, 200 - 6x300- 14, 000/- மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர்: ரூபா 8, 000- 5x250 - 9, 250/- தரம்11 மாதமொன்றுக்கு
3. விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4,500- 10x200 - 6,500/- மாதமொன்றுக்கு (மருத்துவபீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பளம் அளவுத்திட்டத்தில் 4,500/- ரூபாவுக்குமேலதிகமாக இரண்டு படியில் அதாவது ரூபா 4,900/- இல் வைக்கப்படுதல் வேண்டும்.)
4. உதவிவிரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)ஓராண்டு காலத்திற்கு.

பேராசிரியர்களுக்கும் அறக் கொடைத்தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவுத்திகதி 1990-07-16 ஆகும். ஏனைய பதவிகளுக்கு 1990 - 05 - 16 ஆகும்.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில்செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக் கொடைத் தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23x10சதமமீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: அறக்கொடைத் தவிசு பதவிகளுக்கும் பேராசிரியர் பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
1999-04-11, (சி4299



# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.






விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.

சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ... இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480

இப்பொழுது!
ஒரே தடவையில்
முழுப் பணத்தையும்
செலுத்தி பஜாஜ்
வாகனத்தை
உடனடியாகவே
பெறலாம்.

## பஜாஜ் பயணம் கோடி பெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே
இருக்கும் அன்பன்
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

19 - 04 - 1990 வியாழக்கிழமை

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

## எமது பெண் போராளிகளுக்கு முன்னுதாரணம் அன்னை பூபதி!

### புலிகளின் மகளிர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம். ஏப் 19
"எமது தாயகத்தின் விடிவிற்காய் தன்னுயிரைத் தியாகம் செய்ததன் மூலம் எமது தேசிய விடுதலைப் போரில் பங்குகொண்டுவரும் பெண் போராளிகள் அனைவருக்கும் முன்னுதாரணமாய் விளங்குகிறார் அன்னை பூபதி".

அன்னைபூபதியின் நினைவு தினத்தை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;-

ஆரம்பத்தில் சாத்வீக வழியிலும் பின்னர் எதிரியின் ஆயுத வன்முறையின் முன்பு அகிம்சைப் போராட்டம் தோற்றுப் போக ஆயுதப் பேராட்டமாக முதிர்ச்சி பெற்ற வடிவிலும் முன்னெடுக்கப்பட்ட எமது தேசிய விடுதலைப்போராட்டத்தில், சிறிது காலத்திற்கு முன்பு வரை கூட பெண்களின் பங்களிப்பு மிகச் சொற்பஅளவாகவே இருந்து வந்தது.

ஆனால், காலப்போக்கில் இன ஒடுக்குமுறை கூர்மையடைந்து தமிழர்களுக்கெதிரான இழப்புகள் அதிகரிக்க அதிகரிக்க, சமூகத்தளைகளுள் கட்டுண்டிருந்த பெண்களும் அத்தளைகளை உடைத்து வெளியே வந்து எமது தேசிய விடுதலைப் போரில் பங்கு கொள்ளத் தொடங்கினர்.

இன்று... ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் ஏந்தி களத்தில் இறங்கியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான பெண்கள் எமது தேசத்தையும், மக்களையும் விடுவிப்பதற்காக தம்மை மனப்பூர்வமாக அர்ப்பணிக்க முன்வந்துள்ளனர்.

எமது தாயகத்தின் விடிவிற்காக தன்னுயிரை தியாகம் செய்ததன் மூலம், இவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் விளங்கியவர் ஐம்பத்தெட்டு வயதுடைய அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை.

இந்திய கூலிப் படைகளின் கொடூரங்கள் தீவிரப்படுத்தப் பட்டிருந்த நேரம். இந்திய அரசின் ஆதரவுடன் இயங்கிய தமிழ்த் தேச விரோதக் குழுக்களின் துப்பாக்கிகள் தேச பக்தர்களுக்கு எதிராக திருப்பப்பட்டிருந்த நேரம். இந்நேரத்தில் ......... பாரத தேசத்தின் அதர்மப் போரையும், அவர்களின் கூலிப்படைகள் எம்மக்களுக்கு இழைக்கும் கொடுமைகளையும் நிறுத்துவதற்காக, இரு கோரிக்கைகளை பாரத அரசிடம்முன்வைத்து 32 தினங்கள் உண்ணாநோன்பிருந்துஉருகி, உருகியே மாண்டு போனார் அன்னை பூபதி.

அன்னை பூபதி மேற்கொண்ட உண்ணா நோன்பானது ஒரு சாதாரண சம்பவமல்ல. அது எமது விடுதலைப் பாதையின் சரித்திரம்.

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்ட அன்னை பூபதி, எமது விடுதலைத் போராட்டத்தில் பெண்களின் பெரும் பங்களிப்பையும் உலகத்திற்கு எடுத்தியம்பிய ஓர் உன்னத தியாகி.

இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரின் விளைவாக இன்று இந்திய ஆக்கிரமிப்புப் படை எம் மண்ணிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்கள் ஆக்கிரமிப்பிற்கு அடிபணியமாட்டார்கள் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் அன்னையின் தியாகத்தை பெருமையுடன் நினைவு கூருகின்றனர் எம் மக்கள்.

இப் புனித நாளில்,... எமது தாயக விடுதலைக்கான போராட்டத்துக்கு எமது பூரண பங்களிப்பினை நல்குவோம் என எமது தாயகத்திலுள்ள அனைத்துப் பெண்களும் உறுதி பூணுவோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ)

## ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை

## 18,500 விடைத்தாள்கள் தற்போது மீளாய்வு!

கொழும்பு, ஏப்ரல் 19
18 ஆயிரத்து 500 ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் தற்சமயம் பரீட்சைத் திணைக்களத்தால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

இது முடிந்தவுடன் மே மாதத்தில் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்குக் கிடைத்த புள்ளிகளை பரீட்சைத் திணைக்களம் வெளியிடும் என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (உ-எ)

## மட்டக்களப்பிலும் இரு நேரப் பாடசாலை

### கல்விப் பணிப்பாளர் தகவல்

மட்டக்களப்பு, ஏப்ரல் 19
மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள் இரண்டாம் தவணை முதல் இரு நேரமாக இயங்கும் என்று மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

கல்லூரி, மகா வித்தியாலய தரத்தில் உள்ளவை காலை 8.30 முதல் மாலை 3.30 வரை இயங்க வேண்டும் என்றும், ஒரு மணித்தியாலம் சாப்பாட்டுக்கு இடைவேளை கொடுக்க வேண்டும் என்றும் அவர் சகல கல்லூரி அதிபர்களையும் பணித்துள்ளார்.

ஐந்தாம் வகுப்பு வரை நடைபெறும் பாடசாலைகள் வழமை போல் ஒரு நேரமே இயங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலும் 2 ஆம் தவணை முதல் இரு நேரப்பாடசாலைத் திட்டம் அமுல் செய்யப்பட இருப்பது தெரிந்ததே. (ஒ-3)

St. John's College, Jaffna
Old Boys' Association

The Annual General Meeting will be held on Saturday 5th may 1990 at the College.

Programme For The Day

| | | |
|---|---|---|
| 7 00 | a.m | Holy Communion Service |
| 8.15 | a.m | Fellowship Breakfast |
| 9.00 | a.m | Annual General Meeting |
| 10.00 | a.m. | Cricket Match |
| 12:30 | p.m | Lunch |
| 1.30 | p.m | Cricket Match (Continued) |
| 4.30 | | Principal's Tea |
| | | Fancy Dress Foot Ball Match |

Tickets- Breakfast: Rs. 10/-
Lunch: Rs. 30/-
Obtainable: Mr. S Thanapalan, St. John's College, Jaffna.

S. Panchalingam, President.
K. M. Y. Maurice, Hony - Secretary.
[சி-4457]

## உள்ளூராட்சி தேர்தல்களை ஒரே நாளில் நடத்த முடிவு

### புதிய சட்ட வரைவு தயாராகிறது

கொழும்பு, ஏப்ரல் 19
சகலதர உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே நாளில் நடத்தி முடிப்பதற்கு வசதியாக புதிய சட்ட வரைவு ஒன்று தயாரிக்கப் பட்டு வருகிறது.

இதற்கான முன் நடவடிக்கையில் தேர்தல்திணைக்களம் ஈடுபட்டு உள்ளது.

நாட்டிலுள்ள மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றின் இப்போதைய நிர்வாகங்களைக் கலைத்துவிட்டு, ஒரே நாளில் தேர்தல்களை நடத்துவதற்கு இப்போது சட்டத்தில் இடமில்லை.

அதற்காகவே புதிய சட்டத் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் தேர்தல்களை நடத்தி முடிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அதற்கு ஏற்றதாக விரைவாக இந்தச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தத் தேர்தல்களை ஒரே நேரத்தில்நடத்துவதால் காலவிரயம், பணவிரயம் போன்றவற்றை அதிகளவில் மிச்சப் படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-2]

## இந்திய புலமை பரிசிலும் திறமை, இனவிகிதாசாரப்படி!

### நாளை முதல் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஏப் 19
பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்புக்காக ஐநூறு பேருக்கு இந்தியாவில் புலமைப் பரிசில் வழங்கப்படவிருக்கிறது.

பட்டப் படிப்புக்கு 400 பேருக்கும் பட்டப்பின் படிப்புக்கு நூறு பேருக்கும் இந்த புலமைப் பரிசில்கள் வழங்கப் படும்.

திறமை மற்றும் இனவிகிதாசார அடிப்படையில் புலமைப் பரிசில் பெறத் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

இந்தியப் பல்கலைக்கழகங்களில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகும் 1990-91 ஆம் கல்வி ஆண்டில் கல்வி பெறுவதற்கே தகுதியானோர் தெரிவுசெய்யப்படுவர்.

இந்தப் புலமைப் பரிசில்களைப் பெறுவதற்கு விண்ணப்பங்களை நாளை முதல் "உயர்கல்வி அமைச்சு, 18, வார்ட் பிளேஸ், கொழும்பு-7" என்ற முகவரிக்கு அனுப்பலாம். விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் மே 3 ஆம் திகதியாகும்.

பட்டப்படிப்பு புலமைப் பரிசில் பெறுவதற்கு 1988 / 1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜீ. சி. ஈ. (உயர்தரப்) பரீட்சையில் ஆகக் குறைந்தது நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

சூழல் விஞ்ஞானம், வர்த்தகமும் முகாமைத்துவமும், மானிடவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய நான்கு துறைகளில் ஆங்கில மொழி மூலம் பட்டப்படிப்பு பெறுவதற்கே புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. (உ-2)

## பிரபாவின் மகன் பிறந்த நாள்; விசேட பூசை

யாழ்ப்பாணம், ஏப் 19
விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் மகன் சாள்ஸின் பிறந்தநாளை ஒட்டி நேற்றுக் காலை நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலில் விசேட பூசைகள் நடைபெற்றன.

நேற்றுக் காலை 8 மணியளவில் இருந்து 11 மணி வரை 1,008 சங்காபிஷேகமும் பின் விசேட பூசைகளும் நடத்தப் பட்டன.

பிரபாவின் பாரியாரும், மகனும், மகளும் இந்தப் பூசைகளில் கலந்து கொண்டனர். (ஒ-3)

## சபாநாயகத்துக்கு புதிய பதவி

கொழும்பு ஏப்ரல், 19
கல்வி அமைச்சில் மதிய உணவு மற்றும் தமிழ் மொழி பிரிவுக்கு பொறுப்பாகவிருக்கும் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகத்திற்கு புதிய பதவி ஒன்றும் வழங்கப்பட்டிருக்கிறது.

கல்வி துணை அமைச்சின் இணைப்புச் செயலாளராகவும் அவர் தற்போது நியமிக்கப்பட்டிருக்கிறார். (உ-2)

## அதிபர்களுக்கு பதவி உயர்வு; மீண்டும் நேர்முகப் பரீட்சை!

கொழும்பு ஏப்ரல் 19
அதிபர் தரம் III இற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாத (மே) முதல் வாரத்தில் இசுருபாயவில் நடைபெறும்.

கல்விச் சேவைகள் ஆணைக் குழுவின் உதவிச் செயலாளர் திரு. எஸ். ஏ. பிரேமரத்ன இவ்வாறு உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தார்.

அதிபர் தரம் III இற்கான போட்டிப்பரீட்சைகள் ஏற்கனவே 1988 ஆம் ஆண்டில் நடந்து முடிந்தது என்பது தெரிந்ததே.

திரு. பிரேமரத்ன மேலும் கூறியதாவது:-

கடந்த கால நாட்டு நிலைமை காரணமாக அதிபர் தரம் I, II இற்கான நேர்முகப் பரீட்சைகளில் அனேகர் கலந்து கொள்ள முடியவில்லை.

அவர்களுக்கு மீண்டும் கடைசிச் சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படவிருக்கிறது.

அதிபர் தரம் I இற்கான நேர்முகப் பரீட்சைக்கு 75 பேர் தோற்றவில்லை. அவர்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி முதலும்--

அதிபர் தரம் II இற்கான நேர்முகப் பரீட்சைக்கு 3 ஆயிரம் பேர் தோற்றவில்லை அவர்களுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி முதலும் -- நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

அமைச்சரவை இதுதொடர்பாக முடிவு எடுத்ததும் பதவியுயர்வு பற்றி அறிவிக்கப் படும் என்றும் --

அதுவரை தெரிவானோரது பெயர் விவரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் சொன்னார். (ஒ-2)

## ஞாயிறன்று விசேட பயிற்சி

யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்து ஒழுங்கு நடைமுறைகளில் கடமையாற்றும் தொண்டர்களுக்கும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விசேட பயிற்சி ஒன்று அளிக்கப்பட இருக்கிறது. (ஒ-3)

## மரண அறிவித்தல்கள்

### சவிரிமுத்து லியோ இராஜகாரியர்
(நீர்வேலி கண்ணாடி தொழிற்சாலை)

கரம்பனை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்சமயம் யாழ். றக்கா வீதியில் வசிப்பவரும் காலம் சென்ற சவிரிமுத்து லூறுது தம்பதிகளின் மகன் லியோ இராஜகாரியர் (செல்வநாயகம்) 17-04-90 இல் காலமானார். அன்னார் ஸ்கொலஸ்ரிக்கா (மணி) வின் அன்புக் கணவரும், டட்லியோசவ் (றொஷான்) கனடா, டக்ளஸ் யோன்ஸ் (கெஸ்ரன்) கனடா, ஜெனிற்றா, திறினிற்றா, மிலானி, மாலினி (யாழ். திருக்குடும்ப கன்னியர் பாடசாலை) அவர்களின் அன்புத் தந்தையும், சின்னத்துரை செலஸ்ரீனா, அலோசியஸ் கெலிஸ், இராசநாயகம், திருநாயகம், அருமைநாயகம், துரைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நீர்வேலி சேவி கண்ணாடி தொழிற்சாலை உரிமையாளர் சேவியர், அஞ்சலீனா, புளோறா, அன்ரனி, அசந்தா, ஜெசிந்தா, நியூட்டா, பின்ரா, கலிஸ்ரன், லொறிற்றா, றொசிற்றா, கனிஸ்ரா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அவரின் றக்கா வீதி இல்லத்தில் இருந்து 19-04-90 வியாழன் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு பின் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

இல: 50, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
[12342]

### முருகேசு விக்னேஸ்வரன்

முன்னாள் எலிபன் கவுஸ் வடபிராந்திய முகாமையாளர் முருகேசு விக்கினேஸ்வரன் காலமானார். அன்னார் ஆனந்தபாஸ்கரியின் அன்புக் கணவரும், சரதன் [யாழ். இந்துக்கல்லூரி], தாமரா [உடுவில் மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற முருகேசு, திருமதி தங்கனேசத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற துவாரகேஸ்வரன், திலகவதி, பரமேஸ்வரன், காலஞ்சென்ற கனகசிங்கம், அருந்தவநாயகி, குமாரசாமி, வைத்தீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரிபூரணம் நடராசாவின் அன்பு மருமகனும், தேவிராதானந்தா, அனுராதா ஆகியோரின் மைத்துனரும், திவ்யா, அருண் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
து. கனகசபேசன்

"சரவணா"
ஏழாலை மேற்கு,
ஏழாலை.
[3320]

### திருமதி இராசையா தெய்வானைப்பிள்ளை

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி இராசையா தெய்வானைப்பிள்ளை அவர்கள் 18-04-1990 புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா இராசையாவின் அன்பு மனைவியும், இராசேஸ்வரி, சிவபாதசுந்தரம் (London), பாலசுப்பிரமணிம் (Germany), லோகேஸ்வரன் (London), யோகரத்தினம் (Germany) ஆகியோரின் தாயாரும், பொன்னுத்துரை (C.O), சந்திரவதனா (London), செல்வராணி, சத்தியவதி (London) ஆகியோரின் மாமியாரும், காண்டீபன், சிவசுந்தர், சுதர்சன், பாலினி, பிரியா, தக்சி, மேனன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. சிவபாதசுந்தரம்

கல்வயல்,
சாவகச்சேரி.
[3324]

### திரு. அந்தோனி ஆரோக்கியநாதர்
(சிறாப்பர், இலங்கை மின்சார சபை)

திரு. அந்தோனி ஆரோக்கியநாதர் (சிறாப்பர், இலங்கை மின்சார சபை) காலமாகிவிட்டார்.

இவர் பெல்சியின் அன்புக் கணவரும், காலம்சென்ற அந்தோனி, எலிசம் ஆகியோரின் அன்பு மகனும், மதன், அருண், தீபன், நீலன், கபிலன், குமரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், றீற்றா, அருள்மணி, ருக்குமணி ஆகியோரின் சகோதரனும், செல்வி சூ. ஜெய்ஸி எலியாஸ், நோபேட், லூக்காஸ் (ராசு) ஆகியோரின் மைத்துனரும், ஏபிரகாம், யேசுதாஸ், எட்வேட், ஜெயசீலி, ஜெயமலர், ஜெயராணி, ஜெயசோதி, ஜெயந்தி, யூலியற், ஜசிந்தா, ரமேஷ், வைலற்மேரி, திலகவதி, ஜெயவதி, அருந்ததி, செல்வதி, பிரபாகரன், இதயச்சந்திரன், அலெக்சாண்டர், ஜெலாம், அருந்ததி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19-04-1990) மாலை 4-00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு 45/3, டேவிற் வீதி ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்

45/3, டேவிற் வீதி,
(ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.
[12935]

## மரண அறிவித்தல்கள்

"நாம் கிறீஸ்துவோடு இறந்தோம் ஆயின் அவருடன் வாழ்வோம் என்பதே நமது விசுவாசம்."
உரோ. 6:8

### அருட்சகோதரி தார்சிசியுஸ் யோசவ்

யாழ் திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி தார்சிசியுஸ் யோசவ் 17-04-90 இல் இறைபதம் அடைந்துள்ளார். இவரின் பூதவுடல் இறுதிச் சடங்கிற்காக 19-04-90 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள், இறைமக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மாகாணத் தலைவி,
தி. கு. மாகாண இல்லம்,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[3319]

### திருமதி தம்பித்துரை தனலட்சுமி

அளவெட்டி வடக்கைச்சேர்ந்த திருமதி தனலட்சுமி 18-04-1990 புதன்கிழமை காலமானார்.

அன்னார் டாக்டர் தம்பித்துரை (மிருக வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும், வசீகரன் (நோர்வே), குணதேவி, அகல்யா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தாயாரும், முருகையா (கணக்குப் பதிவாளர், கச்சேரி - வவுனியா), குகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மணிமாறனின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழன் பிற்பகல் 3-00 மணியளவில் அளவெட்டி வடக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் வெ. தம்பித்துரை (மிருக வைத்தியர்)

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
[12936]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org